
கோகுலம்


GOKULAM

ஜூலை '99 ரூ. 6/-




பிருந்தாவனம்

வண்ணம் தீட்டுங்கள்!





இந்தப் பறவைகளில் ஒன்று மட்டும் தனித்திருக்கிறது. அது எது?



விடை : ஆந்தை. நள்ளிரவில் இரை தேடும் பறவை.

இரண்டு படங்களுக்கும் இடையே உள்ள ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!






விடை : 1. தொப்பி, 2. கைகள், 3. மைதானக் கோடு, 4. ஸ்டம்ப், 5. பந்து

ஜூலை '99
மலர் : 17
இதழ் : 6



கோகுலம்





அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

உலகக் கோப்பை கிரிக்கெட்டை கோடை விடுமுறையில் டீ.வி.யில் பார்த்து களித்திருப்பீர்கள். ஜூன் நான்காம் தேதி டெண்டுல்கர் 'டக்'கில் 'அவுட்' ஆனபோது உங்கள் உள்ளங்களை சோகம் கவ்வியிருக்கும். அடுத்தடுத்து டிராவிட், கங்குலி, அஷார் எல்லாருமே அம்போ! நாலு விக்கெட் நஷ்டத்துக்கு இந்தியா பதினேழே ரன்கள்! எப்படி துடித்திருக்கும் உங்கள் உள்ளம்! எத்தகைய விரக்தி சூழ்ந்திருக்கும்!

ஆனால் விளையாட்டில், அதிலும் கிரிக்கெட்டில் இதெல்லாம் சகஜம். மற்ற ஆட்டங்களை விட கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் நமக்கு ஏற்படுவதற்குக் காரணமும் இத்தகைய எதிர்பாராத திருப்பங்கள்தான். ஃபுட்பாலில் கோல் போட்டால் உண்டு, இல்லாவிட்டால் இல்லை அவ்வளவுதான். ஆனால் கிரிக்கெட்டில் 'அவுட்' ஆவதற்கு எத்தனை வழிகள் உள்ளன. எண்ணிப் பாருங்கள்! எந்தக் கணத்தில் என்ன விபரீதம் நடக்கும் என்று சொல்ல முடியாது!

பயங்கரமான அவமானத்துடன் கூடிய தோல்வியின் விளம்பில் இந்தியா இருந்தது. அதிலிருந்து மீண்டு, மறுபடி ஆட்டத்தில் சுவாரஸ்யத்தை உருவாக்கினார்கள் ஜடேஜாவும் ராபின்சிங்கும். ஆட்டம் தோல்விதான்; ஆனால் அவலமான தோல்வியல்ல, கௌரவமான தோல்வி என்ற நிலைக்கு இந்திய ஆட்டத்தை இருவரும் உயர்த்தினார்கள். ஜடேஜாவின் சதம் நாட் அவுட்டும் ராபின் சிங்கின் 75ம் இந்தியாவின் மானம் அடியோடு கப்பலேறாமல் காத்தன.

இந்தப் போராடும் உணர்வுதான் முக்கியம். எப்பேற்பட்ட ஆபத்து, எவ்வளவு தீவிரமான பிரச்னை என்று வந்தாலும் மனம் கலங்காமல் எதிர்த்துப் போராடுகிற திட சித்தத்தைப் பெறுவதற்கு கிரிக்கெட் உதவுகிறது. இதே உணர்வுதான் பாகிஸ்தானை எதிர்த்து ஜூன் எட்டாம் தேதி ஆடிய இந்தியா வெற்றி பெறவும் கைகொடுத்தது. இதன் மூலம் உலகக் கோப்பை பந்தயத்திலிருந்து விலக அவசியமின்றி தொடர்ந்து ஆட இந்தியாவுக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

இந்த இதழில் கிரிக்கெட் ஆடும் பெண்கள் சிலர், 'பெண்கள் கிரிக்கெட் ஆடக் கூடாது; அவசியமில்லை' என்ற கருத்துக்கு எதிராகக் காரசாரமாக விவாதிக்கிறார்கள். சோதனைகளைக் கலங்காமல் எதிர் கொள்ளும் திட சித்தத்தை கிரிக்கெட் வளர்க்கிறது என்பது இந்தப் பெண்கள் விஷயத்திலும் நிரூபணமாகிறது. பெண்கள் கிரிக்கெட்டுக்கு எதிரான பிரசாரத்தை இவர்கள் மனம் கலங்காமல் சந்தித்து முறியடிக்க முயற்சி செய்து வருகிறார்கள்.

வாழ்த்துங்கள்!

அன்புடன்,


கி. ராஜேந்திரன்
ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும். - பாரதியார்

கோகுலம்

ஜூலை 1999


இந்த இதழில்...








பாபு வீடு~
பாபு! பாபு!
தூங்கிட்டிருக்கான், குமார்! நீயே போய் எழுப்பு..
இன்னிக்கு மேட்ச் டா, மறந்துட்டியா? எழுந்திரு!
யாரு, குமாரா? சரி நீ போ நான் வரேன்.
நல்ல ராசி தான், போ!
கதை: ஆர்.மணிகண்டன்
படம்:
குமார் சென்றதும்-
ஏண்டா கோபமா இருக்கே?
போங்க நீங்களே என்னை எழுப்பக் கூடாதா? அவன் முகத்திலே முழிச்சா ராசியே கிடையாது! இன்னிக்கி ஜெயிச்ச மாதிரிதான்!


நீ இவ்வளவு 'ராசி' பார்க்கிறவனா! என் முகத்திலே முழிச்சு தோற்றால் என்னையும் இப்படித்தான் சொல்வியா?
சே, சே! நீங்க வேறம்மா!
எல்லாம் நம்ம கையிலே இருக்கு. தன்னம்பிக்கையோட கருமையாக உழைச்சா ஜெயிக்கலாம். ராசியாவது பாசியாவது!
மைதானத்தில் பாபு அணியில் ஒரு விக்கெட் விழுந்தபோது, பாபு நினைத்தான் -
ஹும்.. குமாரோட ராசி வேலை காட்ட ஆரம்பிச்சிருச்சு!


ஆட்டம் முடிந்து பரிசளிக்கும் போது –
அருமையாக ஆடி பாபு-அணியை வெற்றிபெறச் செய்த...
...குமாருக்கு மேன் ஆஃப் த மேட்ச் அவார்ட்!


பாபு வீட்டில் –
மேட்ச் 'வின்' தானே, உன் முகமே சொல்லுதே! உன் ராசி என்னாச்சு?
ராசி, சென்டிமெண்ட் எல்லாம் தவிடு பொடி. குமாராலதான் எங்க டீமே ஜெயிச்சது. இனி நோ சென்டிமெண்ட்! அந்த மூட நம்பிக்கையெல்லாம் ஒழிச்சுக் கட்டிட்டேன்!

ஏழு அட்டைகளின்

1	17	33	49	65	81	97	113
3	19	35	51	67	83	99	115
5	21	37	53	69	85	101	117
7	23	39	55	71	87	103	119
9	25	41	57	73	89	105	121
11	27	43	59	75	91	107	123
13	29	45	61	77	93	109	125
15	31	47	63	79	95	111	127

2	18	34	50	66	82	98	114
3	19	35	51	67	83	99	115
6	22	38	54	70	86	102	118
7	23	39	55	71	87	103	119
10	26	42	58	74	90	106	122
11	27	43	59	75	91	107	123
14	30	46	62	78	94	110	126
15	31	47	63	79	95	111	127

16	24	48	56	80	88	112	120
17	25	49	57	81	89	113	121
18	26	50	58	82	90	114	122
19	27	51	59	83	91	115	123
20	28	52	60	84	92	116	124
21	29	53	61	85	93	117	125
22	30	54	62	86	94	118	126
23	31	55	63	87	95	119	127

32	40	48	56	96	104	112	120
33	41	49	57	97	105	113	121
34	42	50	58	98	106	114	122
35	43	51	59	99	107	115	123
36	44	52	60	100	108	116	124
37	45	53	61	101	109	117	125
38	46	54	62	102	110	118	126
39	47	55	63	103	111	119	127



நீங்கள் கணக்கில் புத்திசாலிதான்!

எனினும் உங்கள் நண்பர்களிடமிருந்தும் புத்திசாலிப் பட்டம் பெற வேண்டாமா? அதற்காகத்தான் இக்கணக்கீடு.

சதுரமான ஏழு அட்டைகளையோ, காகிதங்களையோ

புதிர் உலகம்!

கணக்கு!

4	20	36	52	68	84	100	116
5	21	37	53	69	85	101	117
6	22	38	54	70	86	102	118
7	23	39	55	71	87	103	119
12	28	44	60	76	92	108	124
13	29	45	61	77	93	109	125
14	30	46	62	78	94	110	126
15	31	47	63	79	95	111	127

8	24	40	56	72	88	104	120
9	25	41	57	73	89	105	121
10	26	42	58	74	90	106	122
11	27	43	59	75	91	107	123
12	28	44	60	76	92	108	124
13	29	45	61	77	93	109	125
14	30	46	62	78	94	110	126
15	31	47	63	79	95	111	127

64	72	80	88	96	104	112	120
65	73	81	89	97	105	113	121
66	74	82	90	98	106	114	122
67	75	83	91	99	107	115	123
68	76	84	92	100	108	116	124
69	77	85	93	101	109	117	125
70	78	86	94	102	110	118	126
71	79	87	95	103	111	119	127

எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றில் படத்தில் போட்டுள்ளதுபடி கோடுகள் போடுங்கள். பின்னர் படத்தில் குறித்துள்ளதுபடி ஒவ்வொரு அட்டையிலும் கவனமாகச் சரியாக எண்களைக் குறித்துக் கொள்ளுங்கள். இந்த ஏழு அட்டைகளைக் கொண்டு 127வரை உள்ள எண்களுள் எந்த எண்ணை உங்கள் நண்பர் மனத்தில் நினைத்துக் கொண்டுள்ளார் என்பதைச் சரியாகச் சொல்லலாம்.

இந்தப் பகுதியைக் கவனமாய்ப் படியுங்கள். சிறு தவறு செய்து விட்டாலும் நண்பர்க்கு முன் நீங்கள் தலை குனிய நேரிடலாம். முதலில் உங்கள் நண்பரை மனத்திற்குள் 127க்குள் ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். பின்னர் ஒவ்வொரு அட்டையாக அவரிடம் காட்டி, அவர் நினைத்த எண் அந்த அட்டையில் இருக்கிறதாவென்று கேளுங்கள். அவர் நினைத்த எண் இருக்கும் அட்டைகளைத் தனியாகவும், எண் இல்லாத அட்டைகளைத் தனியாகவும் எடுத்து வையுங்கள். எண் இருக்கும் அட்டைகளில் உள்ள முதல் எண்களைக் கூட்டி அவரிடம் சொல்லுங்கள். நண்பர் திகைத்து நின்று விடுவார். நீங்கள் சொல்லும் எண் சரியாக இருக்கும். உங்கள் நண்பர் நீங்கள் கணிதத்தில் புத்திசாலி என்பதை நிச்சயமாக ஒத்துக் கொள்வார்.

நண்பர் நினைத்துக் கொள்ளும் எண் 100 என்று வைத்துக் கொள்வோம். அந்த எண் மூன்று அட்டைகளில் உள்ளது. அந்த அட்டைகளின் முதல் எண்கள் முறையே, 4, 32, 64 ஆகும். அவற்றைக் கூட்டுங்கள். 100 வருகிறதல்லவா?

ஆதாரம்: ஆர். கோதண்டராமன் எழுதிய நூல்

தொகுப்பு: **இராகினி**

கோகுலம் நியூஸ்

முதலிடம்?

நம் நாட்டில் கல்வி அறிவு அதிகம் பெற்ற மாநிலம் கேரளம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் இப்போது அந்தப் பெருமையை மிசோரம் மாநிலம் தட்டிச் சென்று விட்டது. மிசோரம் மாநிலம் 95% எழுத்தறிவு பெற்று முதல் இடத்தை வகிக்கிறது. கேரளம் 93% பெற்று இரண்டாவது இடத்திற்குத் தள்ளப் பட்டு விட்டது.

அழிவு

துருவப் பிரதேசங்களில் வசிக்கும் பிராணிகளில் சீல்களும் ஒன்று. இவை நீரில் நன்றாக நீந்தும். தரையில் வித்தியாசமாக நகரும். மிகவும் சாதுவான பிராணி. இப்போது அழியும் நிலைக்கு சீல்கள் தள்ளப்பட்டு விட்டன. மனிதர்கள் இவற்றின் தோலுக்காக வேட்டையாடி வருவதால் பெருமளவில் அழிந்து வருகின்றன.





சாதனை !

எவரெஸ்ட் சிகரத்தில் ஒருமுறை யாராவது ஏறினாலே நமக்கெல்லாம் வியப்பாக இருக்கிறது. ஆனால் பத்து முறை ஏறி தனக்கு முந்தைய சாதனையாளரின் சாதனையைச் சமன் செய்திருக்கிறார் அப்பா ஷேர்பா. இவர் ஏறிய உயரம் 8,898 மீட்டர். கடந்த ஒன்பது முறையும் நேபாளம் வழியாக எவரெஸ்டில் ஏறிய ஷேர்பா பத்தாவது முறை திபெத் வழியாக ஏறியிருக்கிறார்.

அபாயம்!


இமயமலைப் பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் கோடை காலத்தில் உருகி, கங்கை, பிரம்மபுத்ரா, அலக்நந்தா போன்ற ஆறுகளில் ஓடி அவற்றை வற்றாத ஜீவ நதிகளாக ஆக்குகின்றன.

இமயமலையில் கோடை காலத்திலும் உருகாத பகுதிகள் உள்ளன. சுற்றுப்புறச் சூழல் கேட்டால் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து விண் வெளியில் உள்ள புற ஊதாக் கதிர்கள் பூமியைத் தாக்குகின்றன. இதனால் வெப்பம் அதிகமாகி இமயமலைப் பகுதியில் உள்ள பனி உருகாத இடங்களிலும் கூட பனி உருக ஆரம்பித்து விட்டன. இதனால் கங்கை, பிரம்மபுத்ரா நதிகளில் வெள்ளம் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது.

பனி உருகுதல் தொடர்ந்து நடைபெறுமானால் 2035 ஆம் ஆண்டிற்குள் கிழக்கு இமயமலைப் பகுதியில் உள்ள பனி முற்றிலுமாக உருகி விடும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.



குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. சஹாரா என்பது (5)
5. கதவிற்கு இது இருந்தால்தான் பாதுகாப்பு (2)
7. பருப்பு வகைகளில் ஒன்று (3)
9. இது இரும்பை ஈர்க்கும் (4)
10. ஒலியை கிரகிக்கும் உறுப்பு (2)
13. பறவைகளில் ஒன்று. இதன் குரல் இனிமையாக இருக்கும் (3)

வலமிருந்து இடம்

3. ஐவகை நிலங்களுள் ஒன்று (3)
6. உண்ணாமல் நோன்பு இருப்பதை இப்படியும் அழைப்பார்கள் (4)
8. நம் நாட்டில் பாயும் நதி. மிகப் புனிதமாகக் கருதுவார்கள் (3)
15. ஆணை, கட்டளை என்பதை இப்படியும் கூறலாம் (5)

மேலிருந்து கீழ்

1. பண்டிகை நாட்களில் வடையுடன் இந்த இனிப்பையும் படைப்பார்கள் (4)
2. அரசுக்கு வருமானம் இதன் மூலம் வரும் (2)
3. அஞ்சல் நிலையத்தில் தபாலுக்கு இடப்படும் அங்கிகாரம் (4)
11. புத்தர் சிறுவயதிலேயே ___ கோலம் பூண்டார் (3)
12. பாம்புகள் இதற்காக வேட்டையாடப் படுகின்றன (2)

கீழிருந்து மேல்

4. வாழை ஒரே ஒரு முறை ___ தள்ளும் (2)
5. வெயிலில் இது அதிகம் ஏற்படுவதால் தண்ணீர் நிறைய பருக வேண்டியுள்ளது (3)
13. வயல்களின் சொந்தக்காரர்கள் அடுத்தவர்கள் பயிர் செய்ய ___ விடுவார்கள் (4)
14. ஐம்புலன்கள் அடங்கியிருப்பது இது (2)
15. சூரியன் காலையில் ___ ஆகும் (4)

— பி. சாந்தி, வேலூர்

விடை 72- ஆம் பக்கம்

தாத்தா வரப் போறார்!

ராமுவும் சோமுவும் சகோதரர்கள். ராமு பெரியவன், சோமு சிறியவன். அண்ணன் தம்பிகள் இருவரும் ஒன்றாகவே சாப்பிடுவார்கள். ஒன்றாகவே படிப்பார்கள். எப்போதும் ஒற்றுமையாகவே இருப்பார்கள்.

இதற்கெல்லாம் காரணம், அவர்களின் தாத்தாதான். அவர்கள் சின்னஞ் சிறு குழந்தைகளாக இருக்கும்போது அவர்களின் கூடவே இருந்து இதையெல்லாம் தானும் செய்து, அவர்களும் சீராகச் செய்யப் பயிற்சி கொடுத்து வளர்த்தார்.

தாத்தா செய்தது இவ்வளவுதானா?

இன்னும் இருக்கிறது!

மாலை நேரங்களில் ராமுவும் சோமுவும் விளையாடி விட்டு வருவார்கள். வீட்டிற்குள் நுழைந்தவுடன் தாத்தா அவர்களை அழைத்துச் சென்று கை, கால், முகம் சுத்தம் செய்யச் சொல்வார். பக்கத்திலிருந்து உதவி செய்வார்.

அதற்குள்ளாக அம்மா பிள்ளைகளுக்கும் தாத்தாவிற்கும் சிற்றுண்டி எடுத்து வைப்பார். பூஜை அறைக்குச் சென்று விளக்கு ஏற்றுவார்கள்.

தாத்தா பக்கத்தில் நின்று ஊதுவத்தியைக் கொளுத்தி வைப்பார்கள்.

அதன் நறுமணம் வீடெங்கும் பரவும். குழந்தைகள் மனதில் அமைதி குடிகொள்ளும். ஊக்கம் பெருகும். உற்சாகம் பொங்கும்.

பிறகு தாத்தாவுடன் ராமுவும் சோமுவும் கோயிலுக்குப் போவார்கள்.

சிறிது நேரம் கோயில் மண்டபத்தில் அமர்ந்து நாதஸ்வர இசையைக் கேட்டு மகிழ்வார்கள். அப்பொழுது தாத்தா அவர்களுக்கு ஸ்வர சாயலையும், ராகத்தின் பெயரையும், தாள முறையையும் கற்றுத் தருவார்.

அதனால் ராமுவும் சோமுவும் அந்தச்




மாயன்

சிறுவயதிலேயே தேவாரம், பிரபந்தம் பாடல்களை ராகத்தோடு பாடக் கற்றுக் கொண்டனர்.

அவர்கள் கோயிலிலிருந்து வீடு திரும்பும் போது விட்டில், ராமு, சோமுவின் அப்பா அலுவலகத்திலிருந்து வந்திருப்பார்.

பிள்ளைகள் இருவரும் குதித்தோடி அப்பாவிடமும் அம்மாவிடமும் விபூதி, பிரசாதம் தருவார்கள். பிறகு படிக்க ஆரம்பித்து விடுவார்கள். பாடங்களை எழுதி முடிப்பார்கள்.

இரவு சாப்பாடு முடிந்தவுடன் தாத்தாவிடம் போய் உட்கார்ந்து கொள்வார்கள். அவர் குழந்தைகளுக்குக் கண்ணன் கதை, பாண்டவர் கதை, பஞ்சதந்திரக் கதைகள், காந்தி மகான் வரலாறு, நேருவின் வரலாறு இப்படி ஏதாவது நல்ல நல்ல விஷயங்களைப் பற்றிச் சொல்லுவார். இவை தினசரி விட்டில் நடப்பவை.



ஒரு நாள் ராமு கண்ணாடி ஜாடியை எடுத்து வந்தபோது கை தவறிக் கீழே போட்டு உடைத்து விட்டான்.

அது ரொம்பவும் அழகான சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த ஜப்பான் ஜாடி. தாத்தா ரயில்வேயில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது இன்ஜின் டிரைவராக இருந்த ஒரு ஆங்கிலேயர், நட்பின் சின்னமாக அதைக் கொடுத்துவிட்டுப் போனார்.

"என் நண்பர் கொடுத்த ஞாபகச் சின்னமாக இருந்த அருமையான ஜாடியை உடைத்து விட்டதில் எனக்கு ரொம்பவும் வருத்தம். உன் கை தவறி விட்டதில் அது கீழே விழுந்து உடைந்துவிட்டது. பரவாயில்லை! ஆனால், நீ இனிமேல் எச்சரிக்கையாக இருக்க, இது ஒரு பாடம், இல்லையா?" என்று அமைதியுடன் கேட்டார் தாத்தா. ராமுவுக்கு மிகவும் வருத்தமாகப் போய் விட்டது.

காலங்கள் கடந்தன. திடீரென்று தாத்தா காலமாகி விட்டார்.

ஒரு நாள் அப்பா அலுவலகத்திலிருந்து வீடு திரும்பினார். உடனே தன் மனைவியையும், பிள்ளைகள் ராமு, சோமுவையும் அழைத்தார். அவர்களைப் பார்த்து, "உங்க தாத்தா, உங்களை எல்லாம் பார்க்க நாளை, இங்கே வரப் போறார்!" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

ராமு – சோமு இருவருக்கும் ஒன்றுமே புரியவில்லை! செத்துப் போனவர், 'மீண்டும் வருவதாவது, எப்படி முடியும்?' என்று குழப்ப நிலையில் இருந்தனர். கொஞ்ச நேரம் யோசித்து விட்டு, 'அப்பாவே சொல்கிறாரே! அவர் பொய் சொல்வாரா? நாளைக்கு ஒரு நாள் தானே இருக்கிறது. அப்புறம் உண்மை தெரிந்துவிடப் போகிறது!' என்று முடிவு செய்தார்கள்.

அன்றிரவு அவர்கள் இரு

வரும் தூங்கவேயில்லை! எப்பொழுது விடியும் என்று இரவு முழுவதும் விழித்துக் கொண்டே இருந்தார்கள். விடியல் நேரத்தில் தூங்கி விட்டார்கள்.

தூக்கம் கலைந்து அவர்கள் விழித்தெழுந்தபோது விடிந்து வெகு நேரமாகி விட்டது. நேற்றைய நினைவுகள் கொஞ்சம் கொஞ்சமாக ஞாபகத்திற்கு வந்தன. பக்கத்தில் அப்பாவும் அம்மாவும் இல்லை!

உடனே கட்டிலை விட்டு இறங்கி அறைக்கு வெளியே வந்தார்கள். கூடத்தில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அருகில் ஓர் அழகான இளைஞர் அமர்ந்திருக்க, அனைவரும் மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டிருந்தார்கள். 'யார் இந்தப் புது இளைஞர்?' அவரின் சிரித்த முகமும், சிரிக்கும் விழிகளும் கவர்ந்தன. அந்த விழிகள் ராமு-சோமுவைப் பார்த்து ஏதோ பேசின. பிள்ளைகள் ஏதோ ஒரு உந்துதலில் வியப்போடு அந்த இளைஞரைப் பார்த்தபடியே அருகே சென்றார்கள்.

அப்பொழுதுதான் அப்பா அவர்களைக் கவனித்தார்.

"ராமு - சோமு! தாத்தாவைத் தெரிகிறதா? இப்பொழுது அவர் உங்களையே பார்த்துக் கொண்டு இருக்கிறார்!" என்றார்.

'இவர் நம் தாத்தாவா? அவர் எவ்வளவு வயசானவர்! இவர் இளைஞராக இருக்கிறார்! அவர் மாநிறம். இவர் சிவப்பாக அல்லவா இருக்கிறார்! இதென்ன அதிசயம்? அப்பாவோ 'உங்க தாத்தா பார்த்துக் கொண்டே இருக்கிறார் என்று சொல்கிறார். ஒன்றுமே புரியவில்லையே!' என்று மேலும் மேலும் குழப்பத்தில் மூழ்கினர்.

மீண்டும் அப்பாவே பேசினார்:


"ராமு - சோமு! இவர் பெங்களூரைச் சேர்ந்தவர். பெரிய தொழிலதிபர். ஆனால் பாவம்! இவருக்குப் பார்வை கிடையாது. ரொம்ப நாள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது தாத்தா இறைவனடியை அடைந்தார். அவர் முதலிலேயே தம் கண்களைத் தானம் செய்வதாக பதிவு செய்திருந்தார். அந்தக் கண்களைப் பொருத்திக் கொண்டுதான் இப்பொழுது இவர் என்னையும் உங்களையும் அவரின் குடும்பத்தையும் ஏன், இந்த உலகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது புரிகிறதா? 'தாத்தா உங்களைப் பார்க்க வருகிறார்!' என்று நேற்று சொன்னது!" என்று விளக்கினார்.


ராமுவும் சோமுவும் அதனைக் கேட்டு 'ஓ' என்று கூவி, கைத்தட்டி தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

'தாத்தா எவ்வளவு நல்லவர்! சாகாமலிருக்கும் வழியைத் தெரிந்து கொண்டிருக்கிறார்! தன் கண்களைத் தானம் செய்து இன்னும் உயிரோடு இருக்கிறார். அவர் சாகாவரம் பெற்ற உத்தமர்' என்று சொல்லிப் பூரித்துப் போனார்கள்.

"மாணிக்கம், பெரிய கண்டம் எது?"
"எங்க அப்பா ஜோசியர். அவரிடம் கேட்டு வந்து சொல்றேன் சார்!"

– எம்.பி.எம். ராஜவேலு





"என்ன இந்தப் படத்துல உன் முகம் தெளிவாகவே தெரியலை?"
"அது 'புகை'ப்படமாச்சே!"

- ஆர். மணிகண்டன்

எதை நம்பி...

பொன்னையா கிராமத்தில் வசிக்கும் விவசாயி. படிக்காதவர். அவருக்கு அவசரமாக பணம் தேவைப்பட்டது. அவருக்குப் பணம் கொடுத்து உதவக்கூடிய அளவிற்கு அந்த ஊரில் வசதி படைத்தவர்கள் யாருமில்லை.



பக்கத்து ஊரிலிருக்கும் வங்கியில் கடன் பெறக்கூடிய திட்டத்தை நண்பர் மூலமாகக் கேட்டறிந்தார் பொன்னையா.

மறுநாள் வங்கிக்குச் சென்றார். வங்கி அதிகாரி பொன்னையாவைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"ஐயா! ஐயாயிரம் ரூபாய் கடன் கேட்கறீங்களே! உங்ககிட்ட எதை நம்பி பணம் கொடுப்பது?" என்று கேட்டார் வங்கி அதிகாரி.

"ஐயா! எங்கிட்ட நாலு கறவை மாடுகளும் வயலும் இருக்குது" என்றார் பொன்னையா.

வங்கி அதிகாரி பொன்னையாவுக்குக் கடன் வழங்க சம்மதித்தார்.

மூன்று மாதங்கள் சென்றன. பொன்னையாவுக்கு விவசாயத்தில் நல்ல விளைச்சல் ஏற்பட்டது.

விளைந்த பொருட்களை பக்கத்து ஊர் சந்தையில் விற்றார். எட்டாயிரம் ரூபாய் கிடைத்தது.

நேராக வங்கிக்குச் சென்று கடனை அடைத்தார். வங்கி அதிகாரி அவரைப் பாராட்டி விட்டு "ஐயா! மீதிப் பணத்தை எங்கள் வங்கியில் போட்டு வையுங்களேன்!" என்றார்.

உடனே பொன்னையா "ஐயா! நான் எதை நம்பி உங்ககிட்டே பணத்தைப் போட்டு வைக்க முடியும்?" என்றார்.

அதிகாரி திகைத்துப் போனார்.


– **எஸ்.எம். ராமமூர்த்தி,**
அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி,
வத்தலகுண்டு.

வக்கீல் வீட்டில் திருட்டு

கதை : ஜெயவண்ணன்

படம் : மகேஷ்





வக்கீல் புண்ணியகோடி வீட்டில் –
எவ்வளவு நகை, பணம் வச்சிருந்தீங்க?
முப்பதாயிரம் ரூபாயும் இருபது பவுன் நகையும்.
அங்கிள், தியாகு எங்கே?
எல்லோரும் ஊருக்குப் போயிருக்காங்க. நான் கூட இன்று காலைதான் வந்தேன்.
கவலைப் படாதீங்க. கண்டு பிடிச்சிடலாம்.
வரேன் அங்கிள்!
போகும் வழியில் –
சார் ஜீப்ல ஏதோ கோளாறு. நிறுத்தி சரி பண்ணிடறேன்.
சீக்கிரம். குமார் வா, டீ சாப்பிடலாம்.


திருடு போன சம்பவம் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.
குமார் உன் துப்பறியும் மூளைக்கு ஏதாவது தோணுதா?
ம்.ஹும். சிதம்பரத்துக்கும் ஸ்ரீரங்கத்துக்கும் அழைச் சிட்டுப் போறீங்களா மாமா?
என்ன திடீர்னு?
நடராஜரையும், ரங்கநாதரையும் விசாரிச்சா திருடு பற்றி துப்பு கிடைக்கும்னு நினைக்கிறேன்.
அப்படி ஒரு நம்பிக்கையா? உன் ஆசையைக் கெடுப் பானேன்? விசாரிச்சுட்டா போச்சு!
தாங்ஸ் மாமா!


அருகில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்த இருவரும் திடீரென்று –
சார்! எங்களை மன்னிச்சிடுங்க.
எதுக்குப்பா?
நாங்கதான் வக்கீல் வீட்டில் திருடினோம்.
என் பேரு நடராஜன். அவன் பேர் ரங்கநாதன். இதைத்தான் இந்தத் தம்பி சூசகமா தெரிவிச்சிருக்கு.
சபாஷ் குமார்! ம்... ஜீப்ல ஏறுங்க.
காவல் நிலையத்தில்-
இவங்கதான் திருடினாங்கன்னு எப்படி கண்டு பிடிச்சே குமார்?
பத்து நாளுக்கு முன் தியாகு வீட்டுக்குப் போயிருந்தப்ப, இந்த ஆளுங்க அங்கே பெயிண்ட் அடிச்சிட்டிருந்தாங்க. கூடவே உளவு பார்த்து, குடும்பமே ஊருக்குப் போறதை புரிஞ்சுக்கிட்டு செயல்பட்டிருப்பாங்களோன்ற ஊகத்துல, சூசகமா பேசினேன். பலிச்சுடுத்து!

கரன்சி சப்பாத்தி!

இந்நேரம் அந்தக் கிழம் வந்திருக்கும் என்று சலிப்போடு, முணுமுணுத்துக் கொண்டே வீட்டினுள் நுழைந்தான் ரகு. புத்தகப் பையை வைத்துவிட்டு முகம் கழுவச் சென்றான்.

''ரகு, தாத்தா வந்திருக்கிறார் வணக்கம் சொல்லு'' என்று அம்மா சமையலறையில் இருந்து குரல் கொடுத்தார். 'ஹூம், வேறு வேலையில்லை' மனதுக்குள் சொல்லிக் கொண்டே தாத்தாவிற்கு வணக்கம் சொல்லிவிட்டு, ஹாலுக்குச் சென்று விட்டான் ரகு.

அம்மா சிற்றுண்டியும் தேநீரும் எடுத்துக் கொண்டு வந்தார். ''ரகு இந்தத் தடவை இரண்டு மாதங்கள் தாத்தா இங்குதான் தங்கப் போகிறார். கண் அறுவை சிகிச்சை செய்து கொள்ளப் போகிறார்'' என்றார்.

ஒவ்வொரு வருடமும் அறுவடை முடிந்த பின் இரண்டு வாரங்கள் கிராமத்தில் இருந்து தாத்தா இங்கு வந்து தங்கி ஓய்வெடுப்பார். தாத்தாவை நினைத்தாலே ரகுவிற்குக் குமட்டிக் கொண்டு வரும். காதில் சிவப்பு கடுக்கன், சட்டையில்லாத உடம்பு. கட்டுக்குடுமி, இடுப்பில் பழுப்பேறிய வெள்ளை வேட்டி, தோளில் ஒரு துண்டு. இவருக்கு அம்மா ராஜ உபசாரம் செய்வது ரகுவிற்கு சுத்தமாகப் பிடிக்காது.

இந்தத் தாத்தா, அப்பாவைப் பெற்றவரோ அம்மாவைப் பெற்றவரோ இல்லை. கிராமத்தில் உள்ள நிலங்களை பொறுப்போடு கவனித்துக் கொள்ளும் தாத்தா. அப்பாவை, அப்பனே என்றும் அம்மாவை தாயே என்றும் அவர் அழைப்பது ரகுவிற்குப் பிடிக்காது. 'சுத்தக் காட்டுமிராண்டி இந்தத் தாத்தா' என்று நினைத்துக் கொள்வான். வாய்விட்டுச் சொல்ல முடியாது. அம்மாவும், அப்பாவும் அவர் மேல் அவ்வளவு மரியாதை வைத்து உள்ளார்கள். ஒரு நாள் ''என்ன பெரிய விவசாயம் செய்கிறார் இவர்'' என்று அம்மாவிடம் கோபத்துடன் கேட்டான் ரகு.

''அவர் கஷ்டப்பட்டு விவசாயம் செய்யாவிட்டால் நாமெல்லாம் சாப்பிட முடியாது. கிராமத்தில் இருக்கும் விவசாயிகள் சேற்றில் கால் வைக்காவிடில், நாமெல்லாம் சோற்றில் கை வைக்க முடியாது'' என்றார் அம்மா. மேலும் விவசாயம் எவ்வளவு கஷ்டம் என்பதையும் விளக்கினார்.

அம்மாவின் இந்தப் பேச்சைக் கேட்டு எரிச்சல் அடைந்தான் ரகு. 'என்ன இந்தக் கிழம் பெரிசா கஷ்டப்படுகிறதா அம்மா சொல்றாங்க. டீ.வியில் பார்க்கிறோமே, விவசாயிகள் எவ்வளவு ஜாலியா பாட்டுப் பாடிக் கொண்டு விதை விதைக்கிறார்கள். கொஞ்ச நேரத்தில நெற்கதிர் வந்து விடுகின்றன. உடனே நெற்கதிரை அடித்து மூட்டை கட்டி விடுகிறார்கள். அப்படியே விவசாயம் செய்யாட்டி என்ன? என் அப்பா கை நிறைய சம்பளம் வாங்குகிறார். ணத்தை விட்டெறிந்



தால் அரிசி, கோதுமை கிடைத்து விட்டுப் போகிறது. பெரிசா அம்மா இந்தக் கிழத்தை தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு ஆடுகிறார்களே' என வருந்தினான் ரகு.

மனக் குழப்பத்தோடு, இரவு உணவை முடித்துக்கொண்டு, படுக்கைக்குப் போனான் ரகு.

விடுமுறைக்கு ரகு கிராமத்துக்குச் சென்றான். அப்பா, அம்மாவோடு விதை விதைத்து, நாற்று நட்டு, நெல் விளையும் வரை விவசாயிகள் படும் கஷ்டத்தைப் பார்த்து ரகுவிற்கு ரத்தக் கண்ணீரே வந்து விட்டது. முழங்கால் சேற்றில் நின்று நாற்று நடுவதனால் காலில் சேற்றுப்புண். எலி, பூச்சி, இவற்றிடமிருந்து பயிரைப் பாதுகாப்பது போன்ற பல தொல்லைகள். டீ.வியில் நாம் பார்ப்பது போல், விவசாயம் செய்வது அவ்வளவு எளிதல்ல என்பதை தெரிந்துகொண்டான் ரகு.

தாத்தாவிற்கு கண் அறுவை சிகிச்சை முடிந்தது. இனி தன்னால் கிராமத்திற்குப் போய் விவசாயம் பார்க்க முடியாது என்று கையை விரித்து விட்டார். அவரைத் தொடர்ந்து கிராமத்தில் உள்ள மற்ற விவசாயிகளும் 'இனி நாங்கள் விவசாயம் செய்ய மாட்டோம்' என ஸ்டிரைக் பண்ண ஆரம்பித்து விட்டார்கள்.


'எங்களுக்குக் கிராமத்தில் எந்த வசதியும் இல்லை. ரோடு வசதி இல்லை. மருத்துவமனை வசதி இல்லை. அது மட்டுமல்லாமல் விவசாயத்தில் எங்களுக்கு லாபமே இல்லை. வறுமை எங்களை வாட்டுகிறது' என விவசாயிகள் அனைவரும் கொடி பிடித்துக் கோஷம் போட்டார்கள்.

அரிசி, கோதுமை வாங்கக் கடைக்குச் சென்ற அப்பா எந்தக் கடையிலும் ஒன்றும் கிடைக்கவில்லை என வெறும் பையோடு திரும்பி வந்தார். அம்மா என்ன செய்வது எனத் தெரியாமல் அப்பாவின் சம்பளப் பணத்தை ஊற வைத்து மிக்ஸியில் அரைத்து சப்பாத்தி செய்தார். ரகு பள்ளிக்குப் புறப்பட்டான். அம்மா சப்பாத்தி கொண்டு வந்து கொடுத்து சாப்பிடச் சொன்னார். சப்பாத்தியைப் பிட்டு வாயில் வைத்தான். குமட்டிக் கொண்டு வந்தது. ''ஐயோ என்னால் சாப்பிட முடியாது'' என அலறிக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்தான் ரகு.

ரகுவின் அலறலைக் கேட்டு அம்மா ஓடி வந்து விசாரித்தார். ரகு, மலங்க மலங்க விழித்துக்கொண்டு நின்றான். பிறகு சூழ்நிலையைப் புரிந்து கொண்டவனாய் தான் கண்ட கனவைச் சொன்னான். ''அம்மா, நான் படித்துப் பெரியவனாகி, விவசாயம்தான் பண்ணுவேன். வேறு எந்த வேலைக்கும் போக மாட்டேன். புதிய முறையிலே விவசாயம் செய்து உற்பத்தியைப் பெருக்குவேன். விலைவாசியைக் குறைப்பேன்'' என்றான் மகிழ்ச்சியோடு!

நான்சி





எங்கள் பள்ளியில் நடந்தது!

இரட்டைக் கிளவி

தமிழ் ஆசிரியர் இலக்கணம் நடத்திக் கொண்டிருந்தார். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாணவனை எழுப்பி, ''இரட்டைக் கிளவிக்கு உதாரணம் சொல்'' என்றார். உடனே அவன், ''கருப்பாயி, கண்ணாத்தா'' என்றான். நாங்கள் சிரிக்க, ஆசிரியர், ''நான் என்ன கேட்டேன், நீ என்ன பதில் சொல்றே?'' என்றார். ''யார்கிட்ட வேணும்னாலும் கேளுங்க சார், எங்க வீட்டில் இரட்டைக் கிழவிகள் இருக்காங்க'' என்றான். ''வேடிக்கை பார்த்ததும் இல்லாமல், இப்படி ஒரு விளக்கம் வேற கொடுக்கறே. ஐம்பது முறை இரட்டைக் கிளவிக்கு உதாரணம் எழுதிட்டு வா'' என்றார் ஆசிரியர்.


– எஸ். சுபா,
திருவண்ணாதபுரம்.



இரும்புச் சத்து

அறிவியல் பாட வேளை. ஆசிரியர் நுழைந்ததும் ஒரு மாணவன் எழுந்து நின்று "சார்! நேற்று நடத்திய பாடத்தில் ஒரு சந்தேகம்" என்றான். "என்ன சந்தேகம்?" என்று கேட்டார் ஆசிரியர். "நேற்று முருங்கைக் கீரையில் இரும்புச் சத்து அதிகம் என்று சொன்னீங்க. ஆனால் வீட்டில் காந்தத்தை எடுத்து முருங்கை இலையில் வைத்தேன். அது ஒட்டவேயில்லை. அப்ப இரும்புச் சத்து இல்லைன்னுதானே அர்த்தம்!" என்றான். ஆசிரியரும் எங்களுடன் சேர்ந்து சிரித்தார். பிறகு, "புதுப் பாடம் எடுக்கலாம்னு வந்தால் இப்படி கேள்வி கேட்டுத் தொல்லை படுத்தறியே!" என்றார். கேள்வி கேட்டவன் பாவம் போல் உட்கார்ந்திருந்தான்.

– ஆ. குமார்,
செஞ்சி.



இரட்டைக் கிளவிக்கு உதாரணம் கொடு!






ஏன்?

ஆங்கிலப் பாட வேளை. வகுப்புத் தலைவனைக் கூப்பிட்டு பத்து ஆங்கில வார்த்தைகளை எழுதிப் போடச் சொன்னார் ஆசிரியர். அவனும் கரும் பலகையில் எழுதினான். பிறகு எங்களைப் பார்த்து, ''இந்தப் பத்து வார்த்தைகளையும் தமிழில் மொழி பெயர்த்து எழுதுங்கள்'' என்றார். எல்லோரும் பீக்காக் என்பதற்கு மயில் என எழுதியிருக்க ஒருவன் மட்டும் 'பட்டாணி சேவல்' என எழுதியிருந்தான். ஆசிரியர் சிரித்து விட்டு, ''ஏன் இப்படி எழுதியிருக்கே?'' என்றார். ''சார், pea க்கும் cock க்கும் இடையில் இடம் விட்டு எழுதிப் போட்டிருக்கான். அதனாலதான் அப்படி எழுதினேன்'' என்றான்.

– நா.பா. சிவகுமார்,
பெரியதச்சூர்.



ஆ! இங்க்...

அன்று எங்களுக்கு கலர் டிரஸ் போட்டு வருமாறு கூறியிருந்தனர். எனவே எல்லோரும் புத்தாடை அணிந்து வந்திருந்தோம். திடீரென என் தோழியின் பேனா எழுதவில்லை. உடனே இங்க் இருக்கிறதா என்பதை அறிய உதறினாள். பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெண்ணின் புது உடையில் இங்க் பட்டுவிட்டது. உடனே பதறியபடி, ''ஆ! இங்க்'' என்று அலறினாள். ''இது ஆ இங்க் இல்லை. புளு இங்க்'' என்றாள் என் தோழி. உடனே அனைவரும் சிரித்தோம். அந்தப் பெண்ணுக்கோ அழுகையே வந்து விட்டது. பிறகு என் தோழி மன்னிப்புக் கேட்டாள்.

– க. கௌரி,
திருநெல்
வேலி.

பாவம்!

உணவு இடைவேளை. பள்ளி மைதானத்துக்குள் ஒரு மாடு நுழைந்தது. அதைக் கண்டதும் என் நண்பர்கள் ஒரு குச்சியை எடுத்துக் கொண்டு துரத்தினார்கள். இதைப் பார்த்த தமிழ் ஆசிரியர், ''ஏம்ப்பா, துரத்தறீங்க? பாவம் வாயில்லா ஜீவன் '' என்று வருத்தப் பட்டார். ''சார், இதைப் பார்த்துதின்னைப் பசங்க பயப்படறாங்க. அதனாலதான் விரட்டினோம்'' என்றான் ஒருவன். ''பாவம் மாடுன்னு வேணா சொல்லுங்க சார். வாயில்லா ஜீவன்னு சொல்லாதீங்க. அதுக்குத்தான் பெரிய வாய் இருக்கே!'' என்று மற்றொரு நண்பன் சொல்லவும், ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தனர்.

– வி. தமிழரசன், பத்தாம் வகுப்பு,
அரசினர் மேல் நிலைப் பள்ளி,
பெரியதச்சூர்.



கண் தெரியுமா?

ஆந்தைகளைப் பற்றி பாடம் நடத்தி முடித்து விட்டு கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார் ஆசிரியர். என் நண்பனிடம் ''ஆந்தைக்கு இரவில் கண் தெரியுமா?'' என்று கேட்டார். ''எனக்குத் தெரியலை சார்!'' என்றான். ''உனக்குத் தெரியுமான்னு நான் கேட்கலை. ஆந்தைக்குத் தெரியுமா?'' என்று மீண்டும் கேட்டார். ''சார், பதில் எனக்குத் தெரியலைன்னு சொன்னேன்'' என்றான். ''ஒழுங்கா கவனிச்சிருந்தாதானே பதில் சொல்ல முடியும். உட்கார்'' என்றார் ஆசிரியர் கோபத்துடன்.

– த.பிரபு,
பத்தாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
செஞ்சி.

தோலிருக்கச் சுளை விழுங்கி!

ரங்கனின் பெற்றோர் சிறு வயதிலேயே இறந்து விட்டனர். பாட்டிதான் அவனை வளர்த்தாள். பெற்றோர் இல்லாத பிள்ளை என்று அதிகச் செல்லம் கொடுத்ததால் கெட்டிக்கார ரங்கன் சோம்பேறியாக இருந்தான்.

ஒருநாள் "ஒரு ரூபாய் வேண்டும்" என்று அடம் பிடித்தான். பாட்டி கோபத்துடன் ஒரு ரூபாயை வீசி எறிந்து, "நயா பைசா சம்பாதிக்கத் துப்பில்லே! எப்படித்தான் பிழைக்கப் போகிறாயோ?" என்று கூச்சலிட்டார்.

ரங்கன் ரோஷத்துடன், "பாட்டி! இந்த ரூபாயைச் செலவழிக்காமல் அருமையான வேலையும், ஒரு வருஷத்துக்கான துணி மணிகளும், மளிகை சாமானும் சம்பாதித்துக் கொண்டு வருகிறேன்" என்று சவால் விட்டு வெளியேறினான்.

பாட்டி 'வறட்டு ஜம்பம்' என்று முணுமுணுத்தபடி தன் வேலைகளை கவனிக்கச் சென்றாள்.

ரங்கன் விடியற்காலையில் அடுத்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தான்.

அங்கிருக்கும் நாவிதர் வீடு சென்று முடி திருத்திக் கொண்டான். ஒரு ரூபாயைக் கொடுத்தான். அந்தக் காலத்தில் முடி திருத்தும் கூலி கால் ரூபாய்தான். ஏழை நாவிதனிடம் சில்லரை இல்லை!

"சரி; கடைவீதியில் மாற்றித் தருகிறேன். உன் குழந்தைகளில் ஒருவனை அனுப்பு" என்றான் ரங்கன். நாவிதனும் தன் பிள்ளையை அனுப்பினான்.

அந்தப் பையனுக்கு நான்கு வயதுதான். வழியில் மிட்டாயும், கமர்கட்டும் பலூனும் வாங்கிக் கொடுத்ததால் நாவிதன் பையன் மாமா, மாமா என்று சிநேகமாய் ஒட்டிக் கொண்டான்.

மணி எட்டு. கடைகள் திறக்கப்பட்டன. சுமாரான ஒரு ஜவுளிக்கடையில் நுழைந்தான் ரங்கன். திருமணத்துக்கான ஜவுளிகளைத் தேர்ந்தெடுத்தான். பின்னர் கல்லாவில் இருப்பவரிடம், "ஐயா! என் தமக்கைக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. என் தந்தை இறந்து ஒரு மாதமே ஆனதால் என் தாய் ஊருக்குள் வர மாட்டார். எங்கள் ஊர் குக்கிராமம். ஜவுளிக்கடை கிடையாது. திருமணத்துக்கு வேண்டிய பட்டு ஜவுளிகளை இந்த ஊரில் எடுத்து விடலாம் என்று நினைத்து என்னை ஊருக்குள் அனுப்பினாள் என் தாய். பணம் என் தாயாரிடம் இருக்கிறது. தாங்கள் என்னை நம்பி இந்த ஜவுளிகளைக்



கொடுத்தனுப்பினால் நான் என் தாயாருக்குப் பிடித்த ரகங்களுக்கான பணத்தை வாங்கிக் கொண்டு மீதி ஜவுளியையும் கொண்டு வருவேன். அதுவரை என் பெரிய அக்கா குழந்தையான இவன் இங்கே இருக்கட்டும்" என்று நம்பும்படி கூறினான்.

ஜவுளிக் கடை முதலாளியும், 'நல்ல வருமானம். விட்டு விடக் கூடாது. குழந்தையை விட்டு விட்டுப் போகிறானே' என்று நம்பி ஒப்புக் கொண்டார்.



நாலைந்து பட்டுப்புடைவைகள், பட்டு வேஷ்டிகள், சட்டைத் துணிகளோடு கம்பி நீட்டிவிட்டான் ரங்கன். சிறிது நேரம் சென்றதும் ஜவுளிக்கடை முதலாளி, நாவிதன் பையனிடம், "தம்பி! உங்க மாமா எங்கே? இன்னும் காணோம்" என்று கேட்டார்.

"மாமா ஊரிலே இருக்காங்க" என்று பதில் சொன்னான்.

"அப்போ இவர் சின்ன மாமாவா?" என்று கேட்டார் முதலாளி.

"ஐயே! இவர் பலூன் மாமா; கமர்கட் மாமா; மிட்டாய் மாமா; அவர் நாலணா தந்தா நான் வீட்டுக்குப் போயிருவேன்" என்றான் சிறுவன்.

முதலாளியின் மனம் பதறியது. ஏமாந்து விட்டோமோ என்ற சந்தேகம் எழுந்தது. கடைப் பையனை அனுப்பி ஊர் எல்லையில் போய் பார்க்கச் சொன்னார். அவன் பார்த்து வந்து தாயும், மகனுமாக யாருமே இல்லை என்ற இடிச் செய்தியைக் கூறியதும், எல்லோருமாகச் சேர்ந்து நாவிதர் மகனைக் குடைந்தனர். சிறுவனாயிற்றே! அழ ஆரம்பித்தான். பிள்ளையைத் தேடிக் கொண்டு வந்த நாவிதருக்கும், ஜவுளிக் கடை முதலாளிக்கும் வாக்குவாதம் ஏற்பட வழக்கு அரசரிடம் போயிற்று.

ரங்கன் ஒரு வேஷ்டியைக் கூலியாகக் கொடுத்து தன் அளவுக்குச் சட்டைகள் தைத்துக் கொண்டான்.

அலங்காரமாய், ஆடம்பரமாய் உடை அணிந்து கொண்டு இன்னொரு ஊருக்குச் சென்றான். ஒரு கமாரான மளிகைக் கடையில் நுழைந்து ஒரு வருஷத்துக்கான மளிகை அட்டவணையைக் கொடுத்தான்.

மளிகை சாமான்கள் கட்டப்பட்டதும் பணம் திருட்டுப் போனதாக நாடகம் ஆடினான். தன்னோடு ஒரு ஆளை அனுப்பினால் பணம் கொடுத்து விடுவதாகக் கூறினான்.

"உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டார் மளிகைக் கடை முதலாளி.

"தோலிருக்கச் சுளை விழுங்கி" என்றான் ரங்கன்.


"இப்படி ஒரு பெயரா? அதிசயமாக இருக்கிறதே" என்று அவர் வியக்க, 'பலாப் பழத் தோலை வாழைப் பழம் உரிப்பது போல் உரித்து, சேதமில்லாமல் சுளை களைச் சாப்பிடுவதால் அது காரணப் பெயர் ஆனது" என்றான் ரங்கன்.

மளிகைக் கடை முதலாளிக்கு சொந்தமாக ஒரு பலாத் தோப்பே இருந்ததால் சுளை விற்பனைக்கு இப்படி ஒரு ஆள் இருந்தால் தேவலை என்று தோன்றியது.

ஒரு பலாப்பழத்தைக் கொண்டு வரச் சொல்லி சோதித்தார். கொட்டையோ, பழமோ சேதமில்லாமல் வெகுசீக்கிரத்தில் ரங்கன் பிரித்த சாமர்த்தியத்தைக் கண்டு வியந்தார்.

இதற்குள் அரண்மனைக் காவலர்கள் வந்து ரங்கனைப் பிடித்துச் சென்றனர்.

மாலதி



"நேற்று தூக்கத்திலே உளறி விட்டேன்!"

"கஷ்டம், கஷ்டம்! தூக்கத்திலும் கூடவா!"

– காழி மா. பானுமதி

வழக்கை விசாரித்த மன்னர், "ஏமாற்றுவது குற்றமல்லவா?" என்று கேட்டார்.

"கொட்டும் மழையைத் தேக்கி வைக்க ஏரி, குளம் வெட்ட வேண்டியது வேந்தர் கடமை. இல்லாவிடில் ஊருக்குள் வெள்ளம் புகுந்து பயிர்களை நாசமாக்கும். என் போன்ற புத்திசாலிகளுக்கு வேலை கொடுப்பது கொற்றவர் பொறுப்பல்லவா?" என்று எதிர் கேள்வி போட்டான் ரங்கன்.

"சரி. சில சிக்கலான வழக்குகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அவற்றுக்கு நீ தீர்ப்பு சொல்லு. அதில் உன் சாமர்த்தியத்தைப் பார்க்கிறேன்" என்றார் அரசர்.

ரங்கன் சம்மதித்தான். முதல் வழக்கு.

"ஒரு குதிரைக்கு இரண்டு பேர் சொந்தம் கொண்டாடுகிறார்கள். யாருடையது குதிரை என்று சொல்ல வேண்டும்" என்றார் அரசர்.

சொந்தமென்று கூறிய இருவரும் வரவழைக்கப்பட்டனர். ரங்கன் "குதிரைக்கு எந்தக் கண் குருடு?" என்று ஒருவனிடம் கேட்டான்.

"இடது கண் குருடு" என்றான் அவன். "வலது கண்ணல்லவா குருடு என்று வைத்தியர் சொன்னார்!" என்றான் ரங்கன்.

"ஆமாம்... ஏதோ மன உளைச்சல். வலது கண்தான் குருடு" என்றான் அவன்.

மற்றவனை அழைத்து, இதே போல் கேட்டான் ரங்கன்.

"குதிரைக்கு எந்தக் கண்ணும் குருடில்லை" என்று ஆணித்தரமாகச் சொன்னான் இரண்டாமவன்.

'குதிரை இவனுடையதே' என்று தீர்ப்பளித்தான் ரங்கன்.

அரசர் அவன் சாமர்த்தியத்தை தமக்குள் மெச்சிக் கொண்டார். ஆனாலும் திருப்தி அடையாதவர் போல மேலும் சோதனை செய்தார்.

ஆடம்பரமாக உடையணிந்த பல பெண்களை முன் நிறுத்தி, 'இதில் அரசகுமாரி யார் எனக் கண்டு பிடி. அருகில், நெருங்கவோ, பேசவோ கூடாது' என்றார் மன்னர்.

சில வினாடிகளிலேயே ராஜகுமாரியைக் கண்டுபிடித்து விட்டான் ரங்கன்.

"எப்படி கண்டு பிடித்தாய்?" என்று அரசர் வியக்க, "அரசிளங்குமரியின் முகத்தில் கம்பீரமும், இயல்பான நிலையும் இருந்தது. ராஜகுமாரிக்கு இருபக்கத்திலும் இருந்தவர்கள் சற்று விலகி பயத்துடன் நின்றிருந்தனர். ராஜகுமாரியைத் தவிர மற்றவர் முகங்களில் லேசான பதட்டம்; வியர்வை இருந்தது" என்றான் ரங்கன்.

அரசரும் அமைச்சர்களும் ரங்கனின் கூர்மதியைப் போற்றினர்.

"ஒரு பலகாரக் கடைக்காரன் தன் கடைப் பலகாரங்களை ஒருவன் மோப்பம் பிடித்ததற்குப் பணம் தர வேண்டும் என்று வழக்குப் போட்டிருக்கிறான். எவ்வளவு பணம் தர வேண்டும் என்று தீர்ப்பளிப்பாய்?" என்று மன்னர் கேட்க,

"முகர்ந்த பலகாரத்துக்கான விலையை நாணயங்களாக ஒரு பையில் போட்டு, பலகாரக்கடைக்காரர் முன் ஓசை எழுமாறு குலுக்கினால் தீர்ந்தது. மூக்குக்குக் காது சரிதானே" என்றான் ரங்கன்.

ரங்கனின் அறிவை மெச்சிய அரசர் அவனை நீதிபதியாக்கினார். ஜவுளிக் கடைக்காரருக்கு துணிகளுக்குண்டான கிரயமும், நாவிதனுக்கு நஷ்ட ஈடாக சிறு தொகையும் கொடுத்தார்.

பாட்டியிடம் ஒரு ரூபாயைக் கொடுத்து, "பாட்டி! எப்படி என் சாமர்த்தியம்?" என்று கேட்டான் ரங்கன்.

பாட்டி, "அடே! தோலிருக்கச் சுளை விழுங்கி! சம்பளம் வாங்கியதும் மளிகைக் கடை பாக்கியைக் கொடு" என்றார்.

'சூப்பர் ஆல்ரவுண்டர்' காலிஸ்

இலங்கை ஸ்பின்னர் முத்தையா முரளிதரனின் பந்துகளை அடிப்பதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும். ஒரு ஓவரில் நான்கு ரன்கள் எடுத்தாலே பெரிய விஷயம். தென் ஆப்பிரிக்க வீரர் ஜாக் காலிஸ், முத்தையா முரளிதரனின் பந்துகளை விளாசி ஓவருக்கு எட்டு ரன்கள் வீதம் எடுத்து அதிர்ச்சிக்குள்ளாக்கினார். சென்ற ஆண்டு டாக்காவில் நடைபெற்ற 'மினி உலகக் கோப்பை' போட்டியில் நடைபெற்ற சம்பவமே இது. 100 பந்துகளில் 113 ரன்கள் எடுத்து அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றார் காலிஸ். இறுதிப் போட்டியில் மட்டும் சும்மா இருந்தாரா காலிஸ்? இல்லவே இல்லை. இந்த முறை வேறு முறையில் திறமையைக் காட்டினார். முப்பது ரன்கள் கொடுத்து 5 விக்கெட்டுகள் - மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக. இரண்டிலும் மேன் ஆப் த மேட்ச்.

இப்பொழுது நடைபெறுகிறதே உலகக் கோப்பை கிரிக்கெட். இந்தியாவுடன் தென் ஆப்பிரிக்கா மோதிய முதல் ஆட்டத்தில் காலிஸ் சதத்தை சொற்ப ரன்களில் நழுவ விட்டாலும், அணியின் வெற்றிக்குக் காரணமானார்; வழக்கம் போல ஆட்ட நாயகன் ஆனார்.

23 வயது காலிஸ் இன்று சூப்பர் ஆல்ரவுண்டராகத் திகழ்கிறார். முதல் வரிசை பேட்ஸ்மேன்; அதே நேரத்தில் வேகப் பந்து வீச்சாளர். உலகக் கோப்பை போட்டியில் இலங்கையுடனான ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்கா 199 ரன்களே எடுக்க முடிந்தது. தொடக்க பந்து வீச்சாளரில் ஒருவராக வந்த காலிஸ் மிகச் சிறப்பாக பந்து வீசி டாப் ஆர்டர் பேட்ஸ்மேன்களை பெவிலியனுக்கு அனுப்பினார். தென் ஆப்பிரிக்காவின் வெற்றிக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்தக் காலிஸ்தான் 1998-99ஆம் ஆண்டின் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரராக 'சியட் கிரிக்கெட் ரேட்டிங்' அமைப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். காலிஸிற்கு வாழ்த்துகள்!

– விளையாட்டுப் பையன்



● க. வீராச்சாமி, பிராமணவயல்.

? குறட்டை விடுவது எதனால்?

! மூக்கிற்கும் தொண்டைக்கும் பின்புறம் உள்ள தசைகள் அதிர்வதால் குறட்டை வருகிறது. அதாவது மூச்சுக் குழலின் உள் வட்டம் சுருங்கும் போது தங்குதடையின்றி நுரையீரல்களுக்குள் சென்று திரும்ப வேண்டிய நம் சுவாசக் காற்று அதிக அழுத்தத்துடனும் அதிவேகத்துடனும் செல்ல வேண்டியுள்ளது. எப்படி ஒரு புல்லாங்குழலின் துளைகளைச் சிறிதளவு அடைக்கும் போது இசை கிளம்புகிறதோ, அப்படி நம் மூச்சுக் குழலிலும் ஒரு ஓசை கிளம்புகிறது. அது தான் குறட்டை! மூக்குச்சதை மற்றும் அண்ணச் சதை வீங்கும்போது, நாக்கு பெரிதாக, தடிமனாக இருக்கும்போது குறட்டை வரும். புகைபிடிப்போர், மது அருந்துவோர், உடல் பருமனாக உள்ளோர் குறட்டை தொல்லையால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

அது சரி, குறட்டைக்குக் காரணம் கண்டு பிடித்தவர் பெயர் தெரியுமா, உனக்கு? இக்கிமேட்சு (Ikematsu). இவர் ஒரு ஜப்பானிய மருத்துவர். 1960ல் இந்தக் காரணத்தைக் கண்டுபிடித்தார்.

● என். ராஜி, மேலப்பாதி.

? குங்குமம் வைத்துக் கொண்டால் சிலருக்கு அந்த இடம் கருத்துப் போய் விடுகிறதே. ஏன்? அதைப் போக்குவது எப்படி?

! குங்குமத்தில் உள்ள சில வேதியியல் பொருள்கள் தோலுக்கு ஒவ்வாமை (Allergy) ஏற்படுத்தும். இதன் விளைவாக ஹிஸ்டமின் என்கிற பொருளைத் தோல் வெளியிடும். அப்போது தோலில் சிவந்த தடிப்புகளும், அரிப்பும், வீக்கமும் ஏற்படும். நாளடைவில் இது கறுப்பு நிறத்திற்கு மாறி விடும். இதைப் போக்க தரமான குங்குமம் உபயோகிக்க வேண்டும். அல்லது குங்குமமே உபயோகிக்காமல் இருக்க வேண்டும். கறுப்பு நிறம் மறைய அதன் மீது இயக்க ஊக்கிக் களிம்புகளைப் (Steroid Ointments) பூசலாம். ஹிஸ்டமின் எதிர்ப்பு மாத்திரைகளைச் சாப்பிடலாம்.

● க. சரண்யா, ஆண்டிபட்டி.

? நாம் அழும்போது கண்கள் சிவந்தும் வீங்கியும் காணப்படுகிறதே, எதனால் டாக்டர்?

! நாம் அழும்போது உணர்ச்சி வசப்படுகிறோம். இதனால் கண்ணுக்கு வரும் ரத்த நாளங்கள் சுத்தமாக விரிவடைகின்றன. கண்ணுக்கு ரத்த விநியோகம் அதிகரிக்கிறது. இதனால் கண்கள் சிவக்கின்றன. அத்தோடு கண்ணீர்ச் சுரப்பிகளும் தூண்டப்பட்டு கண்ணீர் வெள்ளமாகப் பெருகுகிறது. இதனால் கண்கள் வீங்கியுள்ளது போல் தெரிகிறது.

● தி.சே. அறிவழகன், திருப்புவனம்.

? சர்க்கரை நோய் எதனால் ஏற்படு

பூனை வளர்ப்பதால்



கிறது? அறிகுறிகள் என்ன?

! இன்சுலின் என்ற இயக்குநீர் தேவையான அளவுக்குச் சுரக்காத போதும், குறைந்த அளவில் சுரக்கும் இன்சுலின் முழுமையாக செயல்படாத போதும் சர்க்கரை நோய் வருகிறது. இதற்கு பரம்பரை அம்சம், அதிக உடல் எடை, உழைப்பின்மை போன்றவை முன்காரணிகளாகச் செயல்படுகின்றன. அகோரப் பசி, உடல் எடை குறைதல், அடிக்கடி சிறுநீர் பிரிதல், சோர்வு, அரிப்பு போன்றவை சர்க்கரை நோய்க்குரிய அறிகுறிகளாகும்.

● எஸ். ரேணுகா, நீடாமங்கலம்.

? பித்தவெடிப்புக்கு என்ன மருந்து தடவலாம், டாக்டர்?

! மருத்துவரின் நேரடி ஆலோசனையில் தகுந்த காளான் கொல்லி (Antifungal) மருந்தைத் தடவினால் பித்தவெடிப்பு குணமாகும்.

● ந. சிவக்குமார், வண்ணாரப்பேட்டை.

? டாக்டர், எங்கள் வீட்டில் பூனை வளர்க்கிறோம். பூனை எலியைச் சாப்பிடுகிறது. பூனையை நாங்கள் வளர்ப்பதால் ஏதேனும் நோய் வருமா?

! பிளேக் நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது. பூனைக்கு முறைப்படி தடுப்பூசி போட்டுக் கொண்டால் இந்த நோய் வராது.

● எம். முகமது யாசிர், மதுக்கூர்.

? வாய் பேசாதவர்களுக்குக் காது தெளிவாகக் கேட்காதது ஏன் டாக்டர்?

! பொதுவாக, காது சரியாகக் கேட்காதவர்கள்தான் வாய் பேச முடியாதவர்களாகவும் இருப்பார்கள். இதற்குக் காரணம் காது மற்றும் காது உள்ளெலும்புகள் இவர்களுக்கு சரியாக வளர்ச்சியடைந்திருக்காது. அல்லது செவியையும் மூளையையும் இணைக்கிற செவி நரம்பு வேலை செய்யாது. வழக்கத்தில் நம்முடைய வளர்ச்சிப் பருவத்தின் போது



நோய் வருமா?

காதினால் கேட்பவைதாம் மூளையில் பதிந்து மெய்யறிவாகி வாயினால் வார்த்தைகளை உச்சரிக்க வைக்கின்றன. மூளைக்கு அறிவைத் தருவதே காதுகள்தான். இதனால்தான் காது செவிடானவர்கள் ஊமைகளாகவும் உள்ளனர்.

● தி. ராஜ்குமார், வண்ணாரப்பேட்டை, தஞ்சாவூர்.


? காலையில் உடற்பயிற்சி செய்யும் முன்பு காலைக் கடனை முடிக்க வேண்டும் என்கிறார்களே, உண்மையா?


! உண்மையில்லை. உடற்பயிற்சி செய்த பின்னரும் காலைக் கடன்களை முடிக்கலாம்; தவறில்லை!

டாக்டர் கு. கணேசன்

8 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு : விஜி   படம் : லலிதா






அப்போது –



பயணிகள் அவனிடம் ஓடிவந்தனர்.




சூறாவளிக் காற்றால் கப்பல் திசை மாறிவிட்டது.
அதனால் ஏதாவது ஆபத்தில் இருக்கிறோமா?
பேராபத்து! வாலில்லாக் குரங்கு மனிதர்கள் வசிக்கும் ஜூகப் மலைக்குக் கப்பல் வந்து விட்டது.
அப்படியா! இங்கிருந்து தப்பிக்க வழி இல்லையா?
ம்ஹூம்.... இந்த மலைக்கு வந்த எவரும் உயிருடன் திரும்பிய தில்லை.
உயிர் போகப் போவதை நினைத்தால் பயமாயிருக்கு.


பயணிகள் பயத்தில் நடுங்கிக் கொண்டிருக்கும் போது —
ஐயோ! குரங்கு மனிதாகள் ஓடிவருகிறார்களே!
என்ன செய்றதுன்னு தெரியலையே!


குரங்கு மனிதர்கள் கப்பலை உடைத்தனர்.


பயணிகளைக் கீழே இறக்கிப் பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.
தொடரும்

தங்கச்

1 அப்பா எங்கே?

பிளாட்பாரத்தின் விளிம்பில் நின்றபடி, தொலைவில் பார்த்தபோது ரயில் வருவது தெரிந்தது. கோடையின் கானலில், கரும்புள்ளியான அந்த எஞ்சின் நடுங்குவது போலிருந்தது. பிளாட்பாரத்தில் பரபரப்பு. கலைக்கப்பட்ட எறும்புப் புற்றிலிருந்து கிளம்பும் எறும்புகளைப் போல வந்து மொய்த்துக் கொண்டார்கள், ரயிலில் வந்து இறங்கப் போகும் தங்கள் உறவினர்களை வரவேற்று அழைத்துப் போக.

கட்டவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காய் மூட்டையிலிருந்து சிதறி உருண்டு செல்லும் காய்களைப் போல, ரயில் வண்டியிலிருந்து பயணிகள் மூட்டை முடிச்சுகளுடன், இடித்துப் புடைத்துக் கொண்டு, 'தப தப'வென்று இறங்கிக் கொண்டிருந்தனர். அவசரப் படுபவர்களுக்கு வழி விட்டு சாவதானமாக வண்டியிலிருந்து இறங்குபவர்களும் இல்லாமல் இல்லை.



அந்தப் பெட்டியிலிருந்து இரண்டு குழந்தைகள் - இறங்கலாமா வேண்டாமா என்று தயங்குவதுபோல, நுழைவாயில் கம்பிகளைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்தனர். வெகு நேரமாக யாரையோ தேடிக் களைத்த அவர்கள் பார்வையில் ஏமாற்றம் படிந்திருந்தது. மீண்டும் ஒருமுறை எவ்வி, இங்குமங்கும் பார்த்தது பெண் குழந்தை. அவளுக்குப் பன்னிரண்டு வயதிருக்கும். பதவிசான தோற்றமும் பாங்கான உடையும் வசதியுள்ள குடும்பத்துக் குழந்தை என்பதைப் பறை சாற்றின. அந்தப் பெண் குழந்தையின் தம்பி போலிருந்த பத்து வயது பையன் சற்றே கலவரம் கலந்த குரலில் – "நித்யா! அப்பாவைக் காணலியே?" என்றான். அவன் குரல் உலர்ந்திருந்தது. நெற்றியில் லேசாக வியர்வை துளிர்க்கத் தொடங்கி இருந்தது.

"ஸ்டேஷனுக்கு வரேன்னு உறுதியா எழுதின அப்பா, வராமலிருக்க மாட்டார். வேறு கம்பார்ட்மெண்டிலே நம்மைத் தேடிக் கொண்டிருக்கலாம். நாம் கீழே இறங்கி நிற்போம், வா... அது சரி, நம்ம கோச் நம்பரை நீ அப்பாவுக்கு எழுதின இல்ல?'' தோளிலிருந்து சரிந்த 'டிராவல் பாக்கை' சரி செய்தபடி கேட்டான் நித்யா.

''நான் எழுதின லெட்டரை நீயும்தானே

படிச்சே! இப்போ எம் மேல சந்தேகப் படறியே!"

"சந்தேகப் படலே சத்யா! வண்டி வந்து பத்து நிமிஷமாச்சு, அப்பாவைக் காணாமேங்கற கவலையிலே கேட்டேன். சரி, சரி... அப்பா வராமலிருக்க மாட்டார்... நீ பதட்டப் படாதே, அந்த பெஞ்சிலே உட்காரலாம் வா..."

முதுகில் மாட்டிக் கொண்டிருந்த 'டிராவல் கிட்' டைக் கழற்றிக் கையில் பிடித்தபடி, சத்யா பெஞ்சில் போய் நித்யாவின் அருகே உட்கார்ந்து கொண்டான். இரண்டு

சிலை!

டிராவல் பாக்குகளைத் தவிர அவர்களிடம் வேறு சாமான்கள் இல்லை.

நித்யா கழுத்தை உயர்த்தி பிளாட்பாரத்தின் இக் கோடிக்கு அக்கோடி பார்வையால் துழாவினாள். "சத்யா! ... நாம் இறங்கினது ஐதராபாத் ஸ்டேஷன்தானே?" என்று கேட்கவே, சத்யா தன் சகோதரியை வினோதமாகப் பார்த்தான்.

"என்னைப் பதட்டப் படாதேன்னுட்டு, இப்ப நீயே இப்படிப் பதட்டப் படறியே அக்கா!... அதோ அந்தப் பெயர்ப் பலகையைப் பாரு... ஐதராபாத்துன்னுதானே போட்டிருக்கு? நாம அகமதாபாத் போற வண்டியிலே பயணம் செய்யல்லே!" என்றான்.

"அதுக்கில்லே சத்யா... நம்மை அழைத்துப் போக அப்பா ஸ்டேஷனுக்கு வரல்லியேன்னு கவலையா இருக்கு" என்று அசடு வழிந்தவள், பிறகு சுதாரித்துக் கொண்டு, "நமக்கு இந்த ஊர் புதுசு... இப்போ என்ன பண்றது?... ஸ்டேஷன் வெறிச் சோடிப் போச்சு... நம்ம ரெண்டு பேரைத் தவிர யாருமே இல்லே..." நித்யாவின் முகத்தில் கவலையின் பூச்சு கனமாயிற்று. அப்போது...

ஒரு தூணில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்த ஓர் உருவம் இவர்களை நோக்கி நிதானமாக வந்தது - மல் ஜிப்பா பையிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து அதிலிருந்த உருவத்தையும் இவர்களையும் ஒப்பிட்டுத் திருப்திப்பட்டவன், போட்டோவை மீண்டும் பைக்குள் திணித்துக் கொண்டான். அவனுக்கு நாற்பது வயதுக்கு மேலிருக்கும். மல் ஜிப்பா அணிந்திருந்தான். வெள்ளை பைஜாமா - காவி ஏறிய பற்கள். கலைந்துள்ள கேசம் பற்றிக் கவலைப்படாத ஒரு அல்டாப்தனம். கட்டு மஸ்தான உடல், பார்வையில் சினிமா வில்லத்தனம்.



வாண்டுமாமா

நித்யா, சத்யா அமர்ந்திருந்த பெஞ்சை அணுகினான்.

"ஸ்டேஷன் மாஸ்டர்கிட்டே போய் நிலைமையைச் சொல்லுவோம். அப்பா வோட அட்ரஸைக் கொடுப்போம். அவர் அட்வைஸ்படி நடப்போம்" என்று சத்யா தன் முடிவைக் கூறிக் கொண்டிருக்கும் போது - அந்த மனிதன் அவர்கள் அருகே வந்தான்.

"ஹலோ! குழந்தைங்களா - நீங்க இஞ்சினியர் மோகன் சாரோட குழந்தைங்கதானே?" என்று கேட்டான்.

"ஆமா! நீங்க யாரு?" என்றாள் நித்யா. நாவறண்ட தாகத்துக்கு குளிர்ந்த நீர் கிடைத்தது போன்ற மகிழ்ச்சியில்.

"நான் மோகன் சாரோட ஃப்ரெண்டு. என் பேர் ஜெயராஜ்..." தெலுங்குத்தனமான தமிழில் கூறினான் அவன்.

"அப்பா - அதான், மோகன் சார் வர லியா?" சத்யா பரபரத்தான். "அவரை எதிர் பார்த்துத்தான் நாங்க காத்துக் கிட்டிருக்கோம்."

"உங்களைக் கூட்டிப் போகத்தான் நான் வந்திருக்கேன். உங்க அப்பாவால் வர முடியல்லே... அவரோட குளோஸ் பிரண்டு நான். அதான் என்னை அனுப்பினாரு உங்களை அழைத்து வர. வாங்க போகலாம்.." வக்கணையாகப் பேசினான் ஜெயராஜ். அந்தச் சூழ்நிலையில், நித்யாவும் சத்யாவும் அவனை நம்பத்தான் வேண்டி இருந்தது. குழப்பம் தணிந்தவர்களாக, ஜெயராஜைப் பின் தொடர்ந்தார்கள்.

ஸ்டேஷனுக்கு வெளியே, கார் பார்க்கிங் பகுதியில் ஓர் ஓரமாக, ஆலிவ் பச்சை நிறத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு காரை நோக்கிப் போனான் ஜெயராஜ். பின் சீட்டின் கதவைத் திறந்து நித்யாவையும் சத்யாவையும் உட்காரும்படி கூறினான். டிரைவருக்கு அருகில் அமர்ந்து கொண்டவன், "முஸ்தபா! காரை எடு" என்று கட்டளையிட்டான். கார் நகர வீதிகள் வழியே ஓடி, குடியிருப்புப் பகுதிகளைக் கடந்து, ஊருக்கு வெளியே அமைதியான பகுதியில் ஒரு பழங்காலத்துப் பங்களாவின் முன்னால் போய் நின்றது. உயர்ந்த மதில் சுவர்களால் சூழப்பட்டிருந்தது அந்தக் கட்டடம். பிரும்மாண்டமான இரும்புக் கதவு வேறு.

"நான் நினைப்பதெல்லாம் நடக்குது"

"அப்படியா, என்ன நினைச்சே...?"

"ஆடு, மாடு, கோழி, நாய்... எல்லாம் நடக்குது!"


— எஸ். மோகன்

கார் பயணத்தின்போது, நித்யாவும் சத்யாவும் பேசிக் கொள்ளவே இல்லை. நடப்பதெல்லாம் விநோதமாக, விசித்திரமாக இருந்தது அவர்களுக்கு. படபடக்கும் இருவர் மனதிலும் ஒரே விதமான எண்ணங்கள்தான் ஓடிக்கொண்டிருந்தன. 'இந்த ஆள் நிஜமாகவே நம் அப்பாவின் நண்பன்தானா? அப்பா ஏன் வரவில்லை... வர முடியாமல் அப்படி என்ன நேர்ந்தது? எங்கே போனார்? இதுவரை இப்படி அப்பா நடந்து கொண்டதில்லையே! இதில் ஏதாவது மோசடி இருக்குமோ? இந்த ஆளின் பேச்சை நம்பி இவனுடன் வந்தது தவறோ?' - இப்படியான எண்ணங்கள் குமைந்து கொண்டிருந்தன குழந்தைகள் இருவரின் மனதிலும்.

கார் வந்து நின்ற சத்தம் கேட்டு, பங்களாவின் வாசல் கதவைத் திறந்து கொண்டு, ஒரு முரட்டு ஆள் வெளிப்பட்டான். டிரைவர் முஸ்தபா, இந்த முரட்டு ஆள் இருவரின் தோற்றமும் பார்வையும் நித்யா, சத்யாவின் மனதில் ஒருவிதக் கலவரத்தை உண்டாக்கின. "உள்ளே போகலாம் வாங்க..!" என்று கூறியபடி காரின் கதவருகில் நின்றான் ஜெயராஜ். குழந்தைகள் இருவரும் மந்திரத்தில் கட்டுண்டவர்களைப் போல, மௌனமாகச் சென்றனர். நித்யாவும் சத்யாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டது, 'நாம் செய்வது சரியில்லையோ?.. சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறோமோ..?' என்று மௌன பாஷையில் வினவிக் கொள்ளுவது போலிருந்தது.

"உட்காருங்க... உங்க பேரு என் என்னுகூட நான் கேட்டுக்கலே... முட்டாள் நான்!" என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டான் ஜெயராஜ்.

"என் பேர் சத்யா.. இவ என் அக்கா - பேரு நித்யா. எங்கப்பா உங்ககிட்டே, எங்க பேரைச் சொல்லலியா?" அப்பாவியாகக் கேட்டான் சத்யா.



"சொன்னாரு... உங்க போட்டோவைக் கூடக் கொடுத்திருக்காரு. இல்லாட்டி உங்களை நான் எப்படி கண்டுபிடிச்சிருக்க முடியும்?" என்றபடி ஜிப்பா பையிலிருந்து அந்த போட்டோவை எடுத்துக் காண்பித்தான். குழந்தைகள் இருவரின் தலைகளும் தன் தலையோடு இணைய மோகன் போன கோடை விடுமுறையின்போது காஷ்மீரில் எடுத்துக் கொண்ட படம் அது. அப்பாவின் சிரித்த முகத்தைப் போட்டோவில் பார்த்த குழந்தைகளுக்கு மனம் ஜில்லிட்டது.

''உங்களுக்கு முதல்ல கூல் டிரிங்க் கொண்டு வரச் சொல்றேன். ரொம்பக் களைப்பா இருக்கீங்க'' என்றான் ஜெயராஜ்.

"களைப்பில்லே, கவலை – அப்பாவைக் காணலியேன்னு!" என்றாள் நித்யா.

ஜெயராஜ் அதைக் கண்டு கொள்ளாதவன் போல, "லக்ஷ்மி பிரிஜ்ஜிலிருந்து ரெண்டு லெமனேட் கொண்டு வா குழந்தைகளுக்கு" என்று குரல் கொடுத்தான். அதேசமயம் தான் உட்கார்ந்திருந்த மேஜையின் பக்கவாட்டிலிருந்த ஒரு பொத்தானை அழுத்தினான். உள்ளே, எங்கேயோ மணியோசை கரகரத்தது. மூடப்பட்டிருந்த ஒரு கதவைத் திறந்து கொண்டு முஸ்தபா வந்தான். நித்யாவையும் சத்யாவையும் ஒரு மாதிரியாக நோட்டமிட்டான்.

அவன் வலது கன்னத்தில் குறுக்காக ஒரு வெட்டுக் காயத் தழும்பு இருப்பதைப் பார்த்தான் சத்யா. நித்யாவின் தொடையை நிமிண்டி அந்தத் தழும்பை அவளும் பார்க்கும்படி கண்களால் கூறினான்.

அப்போது லக்ஷ்மி லெமனேடை இரண்டு டம்ளர்களில் ஊற்றிக் கொண்டு வந்து கொடுத்தாள்.

அதை வாங்கிக் கொண்டு "சார்! எங்க அப்பா எங்கே இருக்கார்னு சொல்றீங்களா?" என்று கேட்டாள் நித்யா.

''ரொம்ப துரதிர்ஷ்டம் பாப்பா! உங்களைச் சந்திக்க முடியாதபடி அவர் அவசரமாகப் போக வேண்டியதாயிடுச்சு!" என்றான் மல்ஜிப்பாக்காரன் வேதனைப் படுவது போல.

"எங்களைச் சந்திக்காம அவர் எங்கேயும் போக மாட்டாரே'' என்றான் சத்யா. ''கட்டாயம் உங்களை ஸ்டேஷனிலே சந்திச்சுக் கூட்டிப் போறேன். கவலைப் படாம வாங்கன்னு உறுதியா எழுதி இருந்தாரே, எங்க டாடி. ஒருபோதும் இப்படி வார்த்தை தவறியதே இல்லை..."

"சந்தர்ப்ப சூழ்நிலை அப்படி ஆயிப் போச்சு தம்பி! உங்கப்பாவை உடனே வரும்படி 'புரொபஸர் புண்ணியகோடி ஆளனுப்பி இருந்தாரு. அதைத் தட்டிக் கழிக்க முடியலே உங்க டாடியால. அதான் உடனே கிளம்பிப் போயிட்டார். லெமனேடை சாப்பிடுங்க" என்றான் ஜெயராஜ்.

நித்யாவும் சத்யாவும் குளிர்பானத்தைக் கொஞ்சம் ருசி பார்த்தார்கள். ''அப்போ அந்தக் காட்டுக் கோயிலுக்குப் போயிருக்காரா அப்பா?" என்று கேட்டாள் நித்யா.

ஜெயராஜின் முகத்தில் திகைப்பு பூத்தது. "அந்தப் புராதன மலைக்கோயிலைப் பத்தி உங்களுக்குத் தெரியுமா?" வியப்பு விரிய வைத்த கண்களோடு அவர்களைப் பார்த்தான்.

''தெரியும்... ஜனங்கள் மறந்துவிட்ட அந்தப் புராதனக் கோயிலைப் பத்தி நிறையவே சொல்லி இருக்கார் அப்பா... விஜய நகர சாம்ராஜ்யம் அழிந்தபோது, பாமினி சுல்தான்களின் படைகள் வெற்றி போதையில் வெறியாட்டம் போட்டபோது, பல இந்துக் கோயில்களின் சொக்கப் பொன்னாலான தெய்வச் சிலைகளையும் பொன்னாபரணங்களையும் பாதுகாக்க ஒரு குழுவினர் காட்டுப் பகுதியிலுள்ள ஒரு சிறிய மலைக் கோயிலில் அவற்றை கொண்டு போய் பதுக்கினார்களாம். காலப் போக்கில் அந்தக் கோயில், புதர் மண்டிப் போய் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து விட்டதாம். அதைப் பதுக்கியவர்களும் இறந்துவிட ஆலயங்களின் பொக்கிஷம் இருக்குமிடம் யாருக்குமே தெரியாமல் போய் விட்டதாம். அதைத் தேடிக் கொண்டுதான் – புதை பொருள் அகழ்வு



ஓவியப் போட்டி

ஓவியப் போட்டியில் இந்த மாதம் என்ன தலைப்பு என்று ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு ஒரு எளிமையான தலைப்பு.

தலைப்பு - வண்ணத்துப் பூச்சி.

வண்ணத்துப் பூச்சியின் பெயரிலேயே வண்ணம் இருப்பது போல நீங்களும் வண்ணம் தீட்டி ஓவியங்களை அனுப்பி வையுங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டு, மூன்று மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியைக் குறிப்பிட மறவாதீர்கள். கடைசி தேதி 20.7.99

ஆராய்ச்சித் துறைப் பேராசிரியர் அலைந்து கொண்டிருக்கிறார்" என்றாள் நித்யா.

"எங்க டாடிக்கு ரொம்ப வேண்டப் பட்டவர் புண்ணியகோடி, பள்ளியிலிருந்து கல்லூரிவரை தோழர்களாச்சே!" சத்யா தொடர்ந்தான். "புண்ணியகோடி சார், ஏதேதோ ஓலைச்சுவடிகள், செப்புப் பட்டயங்கள், கல் வெட்டுகளிலிருந்து - தங்கச் சிலைகளும் பொற்காசுகளும் புதைந்து கிடக்கும் புராதன மலைக் கோயிலைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து அதைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு எங்க அப்பாவின் உதவியை நாடினார்.

சத்யாவின் பேச்சை இடைமறித்த நித்யா, "அப்பவே எங்க டாடியோட எங்களாலே கிளம்ப முடியல்லே. படிப்புக் கெட்டுப் போகும்னு அப்பா சொல்லிட்டார். மறைந்திருக்கும் புராதனக் கோயிலைக் காணத் துடிக்கும் எங்க ஆர்வத்தை அறிந்த அப்பா, எங்களைக் கோடைவிடுமுறைக்கு வரும்படி கூறிப் போனார். ஆசையோடு வந்தோம். ஆனா அப்பாவைப் பார்க்க முடியலே...!" என்று சூம்பிப் போன முகத்தோடு 'சூள்' கொட்டினாள்.

ஜெயராஜ், முஸ்தபாவிடம் தெலுங்கில் ஏதோ கூற, இருவரும் பலமாகச் சிரித்துக் கொண்டனர். அவர்கள் சிரிப்பு ரசிக்கும்படியாக இல்லை. முஸ்தபாவின் ஜீன்ஸ் பாக்கெட்டில் ஏதோ துருத்திக் கொண்டிருப்பதைப் பார்த்த சத்யா, அது குத்து வாளா, துப்பாக்கியா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது, நித்யா கேட்டாள்:

"எங்க டாடியை நாங்க எப்போ பார்க்க முடியுங்கறதை நீங்க இன்னும் சொல்லவே இல்லியே சார்!"

கேலிச் சிரிப்பிலிருந்து சுதாரித்துக் கொண்ட ஜெயராஜ், "சீக்கிரமே பார்க்கலாம்... ஆ! பார்த்திங்களா..." என்று தலையில் விரல்களால் தட்டிக் கொண்டவன் - "நான் ஒரு மடையன்! இப்பத்தான் ஞாபகம் வருது. உங்ககிட்டத் தரும்படி, மோகன் சார் ஒரு கடிதம் கொடுத்திருக்கார்" என்று கூறியபடி, தன் மல் ஜிப்பா பாக்கெட்டிலிருந்து, மடிக்கப்பட்டிருந்த ஒரு வெள்ளைத் தாளை வெளியிலெடுத்தவன், அதை நித்யாவிடம் நீட்டினான். அக்காவின் தலையோடு இடித்துக் கொண்டு அப்பாவின் கடிதத்தை சத்யாவும் படிக்கலானான்:

'...இங்கு நீங்கள் வருவதற்கு முன், நான் இங்கிருந்து கிளம்ப வேண்டியதாகி விட்டது . . .





அப்பாவின் கையெழுத்துத்தான், சந்தேகமில்லை என்று உறுதிப்பட்டது குழந்தைகளின் மனது. சூழ்நிலை என் கட்டுப்பாட்டை மீறிப் போய் விட்டது. என்ன செய்ய? ஜெயராஜ் என் நெருங்கிய நண்பர், அவர் நட்பைப் பார்த்து, நான் வியப்பதுண்டு. அவர் விருப்பப்படி நடந்து கொள்ளுங்கள். பொழுது போக ஏதாவது கதைப் புத்தகங்கள் வேண்டுமானால், உடனே தாமதிக்காமல், கடை வீதியிலுள்ள - டவுன் ஹால் எதிரில் – தியாகி குமரன் புத்தகக் கடைக்குப் போங்கள். அதன் முதலாளி தமிழ்நாட்டுக்காரர். நம்பிக்கையானவர். உங்களுக்கு வேண்டிய புத்தகங்களைக் கொடுத்து உதவிகள் செய்வார். சாமர்த்தியமாக நடந்து கொள்ளுங்கள். விரைவில் சந்திக்கிறேன். குட்லக்!'

கடிதத்தைப் படித்து முடித்து தலை நிமிர்ந்தவர்களைப் பார்த்து அந்த ஜெயராஜ் "பார்த்தீங்களா, உங்கப்பா ஜெயராஜ் என் நெருங்கிய நண்பர்னு எழுதி இருக்காரில்லே? அதனால கவலையே படாதீங்க. நான் சொல்றபடி நடந்துக்குங்க. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. நான் அதை முடிச்சிட்டு சிறிது நேரத்திலே வந்துடறேன். நீங்க குளிச்சு டிரஸ் மாத்திக்கிட்டு ரெடியா இருங்க. உங்க தேவைகளை லக்ஷ்மி அம்மா கிட்ட சொல்லுங்க. செய்வாங்க." என்று கூறி விட்டு முஸ்தபாவுடன் வெளியேறினான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த நித்யா, தன் தம்பியிடம், "சத்யா! இந்த ஆளை எனக்குப் பிடிக்கலே!" என்றாள் வெறுப்புடன். அவன் கூட்டாளி முஸ்தபாவோட பார்வையும் நல்லா இல்லே. அப்பாவோட கடிதம் வேற விசித்திரமா இருக்கு – இப்படி விட்டேத்தியா அவர் நமக்குக் கடிதம் எழுதியதே இல்லே....'' தன் சந்தேகங்களை அடுக்கினாள்.

யோசனையுடன் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்த சத்யா, பின் தலையைச் சொறிந்து கொண்டு எழுந்தான்.





அவன் நெற்றியில் சுருக்கங்கள் தோன்ற கூண்டுப் புலியாக இங்குமங்குமாக நடந்தவன், "நீ நினைக்கிறபடிதான் நானும் நினைக்கிறேன் நித்யா. நம் அப்பாவை வலுக்கட்டாயமாக இங்கிருந்து வெளியேற்றி இருக்கணும். துப்பாக்கி முனையிலோ, கத்தி முனையிலோ சில பேர்வழிகள் தங்கள் காரியத்தை சாதிச்சுக்கறதை நாம் சினிமாவில் பார்க்கிறோமில்லியா – அதுபோல. பாவம், அப்பாவால என்ன செய்ய முடியும்?'' என்றான்.

"உண்மைதான், சத்யா. தன் கடிதத்திலே டாடி சூசகமாகத் தன் நிலையை உணர்த்தி இருக்காருன்னு நினைக்கிறேன். இதோ பாரு என்று கடிதத்தின் சில வரிகளைச் சுட்டிக் காட்டினாள். என் நெருக்கிய என்று எழுதி, பிறகு அதில் 'க்'கை அடித்து விட்டு 'ங்' போட்டிருக்கார். எழுதும்போது ஏற்பட்ட தவறல்ல அது, என்னை நெருக்கிய நண்பர் என்பதை நமக்குக் கூறவே அப்படி சூசகமாகக் குறிப்பிட்டிருக்காருன்னு நினைக்கிறேன். 'உடனே தாமதிக்காமல்' என்ற வார்த்தையை அடிக் கோடிட்டிருக்கிறார். அதேபோல, அவர் (ஜெயராஜ்) நட்பைப் பார்த்து நான் வியந்ததுண்டு என்ற வார்த்தையில் 'நட்பை' அடிக் கோடிட்டிருக்கிறார். 'சாமர்த்தியமாக நடந்து கொள்ளுங்கள்' என்று கூறி இருக்கிறார். இதையெல்லாம் நாம், வேறு கோணத்தில் பார்ப்போமானால்....'' வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினாள் நித்யா.

''இன்னொன்றைக் கவனித்தாயா? 'தியாகி குமரன் புத்தகக் கடைக்காரர் வேண்டிய உதவிகளைச் செய்வார்' என்று கூறி, நாம் யார் உதவியை நாட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே நாம் அந்தப் புத்தகக் கடை அதிபரைச் சந்திக்கணும். நம் அப்பா ஆபத்தில் சிக்கியுள்ளார் – நாமும்தான். நாம் உடனே இந்த ஆட்களின் பிடியிலிருந்து தப்பியாகணும். என்ன சொல்றே?" என்றான் சத்யா.

"சொல்ல என்ன இருக்கு. செயல்பட வேண்டியதுதான்!'' என்ற நித்யா, தன் பையுடன் எழுந்தாள். இருவரும் ஓசையின்றி இங்குமங்கும் நோட்டமிட்டபடி வாசல் கதவை மெள்ளத் திறந்து, அதன் இடுக்கு வழியே வெளியே பார்த்தார்கள். அங்கு முஸ்தபா இடுப்பில் கையூன்றியபடி நின்று கொண்டிருந்தான். கதவு திறக்கப்படும் ஓசை கேட்டுத் திரும்பிய முஸ்தபாவின் கை, ஜீன்ஸ் பாக்கெட்டின் பக்கம் நகர்ந்தது.

சட்டென்று கதவை மூடிப் பின் வாங்கிய இருவரும் ஜன்னல் பக்கம் போனார்கள். அது பிரஞ்சு விண்டோ. கம்பிகள் பொருத்தப்படாத கண்ணாடி ஜன்னல். ஜன்னல் கதவை திறந்து வெளியே பார்க்க அங்கே ஒரு முரட்டு மொட்டைத் தலையன், இவர்களைப் பார்த்து விகாரமாகச் சிரித்தான்.

"சந்தேகமில்லை. நாம் கடத்தப்பட்டுக் காவலில் வைக்கப் பட்டிருக்கிறோம் நித்யா!" என்றான் சத்யா. முகம் வெளுக்கத் தன் தம்பியைப் பார்த்தாள் நித்யா.

(தொடரும்)



மானுக்குக் கொம்பு ஆபத்தா?

இந்த மாதம் உங்கள் நூலகம் பகுதியில் ஐந்து புத்தகங்களைப் பற்றிப் பார்க்கப் போறோம்.

முதலில் நாம் தெரிந்து கொள்ளப் போவது, **'விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும்'** என்ற புத்தகத்தைப் பற்றித்தான். இந்தப் புத்தகத்தில் பத்து விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறுகள் சுருக்கமாகவும் சுவையாகவும் தரப்பட்டுள்ளன.

விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும், *கங்கா ராமமூர்த்தி, பக். 96, ரூ. 18/-* *திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17.*

அடுத்தது **'தென்கச்சி வழங்கும் நீதிக்கதைகள்'**. வானொலியில் 'இன்று ஒரு தகவல்' புகழ் ஆசிரியரின் 38 கதைகள் அடங்கிய புத்தகம். சின்னக் கதைகள் ஒவ்வொன்றும் ஒரு நீதி நெறியை வலியுறுத்துகின்றன. எல்லோரும் படித்து ரசிக்கலாம்.

தென்கச்சி வழங்கும் நீதிக் கதைகள், இரண்டாம் தொகுதி, பக். 128, ரூ. 24/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17.

'தமிழ்த் தம்பி' - இந்தப் புத்தகத்தில் பத்து சிறுகதைகள் உள்ளன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு சுவை. 'பல்லி விழுந்தது' கதை நன்றாக சிரிக்க வைக்கிறது.

தமிழ்த்தம்பி, ஜெ. எத்திராஜன், பக். 96, ரூ. 24/-, சாரதா நூலகம், 72, கிருஷ்ணா நகர், மூவரசம்பட்டு அருகில், மடிப்பாக்கம் அஞ்சல், சென்னை - 91.

புதிதாக நாய் வளர்க்க விரும்புவோருக்குத் தேவையான தகவல்களை தரக்கூடிய புத்தகம் **'நாய்களைப் பற்றிய பிரமிப்பூட்டும் செய்திகள்.'** பலவிதமான நாய்களின் படங்களையும் போட்டிருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

நாய்களைப் பற்றிய பிரமிப்பூட்டும் செய்திகள், நீலா கண்ணன், பக். 76, ரூ. 14/-, மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

- ரே

'குருவி நடக்குமா?' 'எறும்புத் தின்னிக்கு எத்தனை பற்கள்?' என்ற அறிவியல் கதைகளின் வரிசையில் ஒன்பதாவதாக வந்துள்ள புத்தகம், **'மானுக்குக் கொம்பு ஆபத்தா?'** பள்ளி மாணவர்கள் விரும்பும் வகையில் கதை வடிவில் சொல்லி, அறிவியல் உண்மைகளையும் தந்திருப்பது நூலுக்குத் தனிச்சிறப்பு. சசியின் ஓவியங்கள் அருமை. இதில் உள்ள பத்து அறிவியல் கதைகளும் கோகுலத்தில் வெளிவந்து பாராட்டுப் பெற்றவை.

மானுக்குக் கொம்பு ஆபத்தா?, ரேவதி, பக். 72, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

- விஜி

பாடி மகிழும் பூங்குருவி!

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
ஏழு மரங்கள், பல செடிகள்
தங்கக் காலை வேளைகளில்
தாவிப் பறக்கும் ஒரு குருவி.

கொய்யா மரத்தில் அதன்வீடு
குட்டிப் பந்தாய் ஒருகூடு
ஹய்யாவென்று புறப்பட்டு
சுகமாய்ச் சுற்றும் சிறுகுருவி

பாடம் ஏதும் அதற்கில்லை
பள்ளிக்கூட பயமில்லை
ஆடும், பாடும், அதன்பாட்டில்
அலைந்து திரியும் அக்குருவி.



புள்ளி உள்ள
இடங்களில்
பிரௌன் வண்ணம்
தீட்டுங்கள்.
மற்ற இடங்களில்
பச்சை வண்ணம்
தீட்டுங்கள்.



அரிசிக் கோலம் சாப்பிட்டு
அங்கே இங்கே சுற்றிவரும்
பரிசு கிடைத்தது போல் தினமும்
பாடி மகிழ்ந்திடும் பூங்குருவி.

கூட்டுக் குருவி பாட்டுக்கு
கூட்டம் எல்லாம் நான்மட்டும்!
வீட்டுக்குள்ளே தினம் எனக்கு
விருந்தேபோல் அதன் கச்சேரி!


— ஜிண்டு





கால் இருக்கா?

என் அம்மா மாலை நேரத்தில் டியூசன் சொல்லிக் கொடுப்பார். அன்று டிக்டேஷன் போட்டு விட்டு உள்ளே சென்று விட்டார். விளையாடி




விட்டு வீட்டிற்குள் நுழைந்த என்னிடம் ஒரு மாணவன்,"அண்ணா, நாய்க்குக் கால் இருக்குதா?" என்று கேட்டான். நானும் "நாலு கால் இருக்குமே, நீ பார்த்ததில்லையா?" என்று கேட்டுவிட்டுச் சென்றேன். சிறிது நேரத்தில் நோட்டை வாங்கித் திருத்திய என் அம்மா அதிர்ந்தார். "ஏம்பா நாய்க்கு நாாாாய்ன்னு நாலு கால் போட்டிருக்கே?" என்று கேட்டார். எல்லோரும் சிரித்தனர். "அண்ணாதான் சொன்னான்" என்று என்னை மாட்டி விட்டான்!

– வெ.அ. கார்த்திகேயன்., வெள்ளோடு.

குத்து!

என் குட்டித் தங்கை மழலையாகப்




பேசுவாள். ஒரு நாள் பக்கத்து வீட்டிற்கு ஊரிலிருந்து ஒரு பெண் வந்திருந்தாள். என் தங்கையுடன் விளையாடினாள். தங்கையின் பொம்மையை எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போது என் பொம்மையைக் கொடு என்பதற்கு மழலையாக "என் பொம்மையக் குத்து" என்றாள் தங்கை. திருதிருவென விழித்த அந்தப் பெண் பொம்மையை ஓங்கிக் குத்த அனைவரும் சிரித்தோம்.

நாய்க்குக் கால் உண்டா?

– க. காத்யாயனி, ஏழாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.

அஞ்சாமை!

ஒரு நாள் பாடம் படித்துக் கொண்




டிருந்த என் தம்பி, "அண்ணா, வீரர்கள் என்றால் எப்படி இருக்கணும்?" என்று கேட்டான். "அஞ்சாமை உள்ளவர்கள் தான் வீரர்கள்" என்றேன் நான். "அப்ப

ஆறு ஆமை வைத்திருந்தால் மாவீரர்களா?" என்று கேட்டானே பார்க்கலாம்! அஞ்சாமை என்றால் பயமின்றி தைரியமாக இருத்தல் என்று விளக்கினேன் நான்.

– அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.

எப்படி முட்ட?

என் அம்மா முட்டை வாங்கி வரச்




சொன்னார். நான் கடைக்குச் சென்றேன். கடையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. பத்து நிமிடம் கழித்துக் கடைக்காரர் என்னைப் பார்த்து, "என்ன வேணும்?" என்று கேட்டார். "எப்படி முட்ட?" என்று கேட்டேன். உடனே எரிச்சலுடன் அவர், "நீ எப்படி வேணும்னாலும் முட்டிக்க. எங்கிட்டே வந்து ஏன் கேட்கறே?" என்றார். எனக்கு சங்கடமாகி விட்டது. "சார், நான் முட்டை என்ன விலைன்னு? கேட்டேன்" என்றேன். "வியாபார நேரத்துல தெளிவா சொல்லிட்டு, சீக்கிரம் வாங்கிட்டு போப்பா" என்றார்.

– எஸ்.ஏ. ஜாபர், வரிக்கல்.

மணி அடிப்பது ஏன்?

ஊரிலிருந்து பெரியப்பா பையன் ராகவன் வந்திருந்தான். அவனை சைக்கிளின் முன் பகுதியில் வைத்து கடைக்குச் சென்றேன். போகும் வழியில் சைக்கிள் மணியை அடித்துக் கொண்டே வந்தான். "வழியில் யாருமே இல்லையே, ஏன் மணி அடிச்சிக்கிட்டு வர்றே?" என்று கேட்டேன். "வழியில் கல்லா இருக்கு. மணி




அடிச்சா கல் விலகி வழி கிடைக்குமே அண்ணா!" என்றான். எனக்கு வந்த சிரிப்பை அடக்க முடியவில்லை! "ஏன் தம்பி ரீல் விடுறே? மணி அடிக்க ஆசையா இருக்குன்னு சொல்லிட்டுப் போயேன்!" என்றேன்.

– ஆர்.வி. மயில்வாகனன், பத்தாம் வகுப்பு, டான் பாஸ்கோ உயர் நிலைப்பள்ளி, மதுரை.

பார்த்து வாங்கலாம்!

என் தம்பி பிடிவாதக்காரன். தான் நினைப்பதை சாதித்தே ஆக வேண்டும் என்று நினைப்பவன். ஒரு நாள் ஊரி



லிருந்து மாமா வந்திருந்தார். என் தம்பியைக் கூப்பிட்டு பொறுமையாக அறிவுரை கூறினார். எல்லாவற்றையும் கேட்டவன் மாமாவிடம், "இனி நான் உங்க விருப்பப்படி நடந்து நல்ல பேர் வாங்கப் போறேன்" என்றான். இதை சரியாக காதில் வாங்காத பாட்டி, "என்னடா வாங்கப் போறே? என்னையும் கூட்டிட்டுப் போ. நல்லா பார்த்து வாங்கலாம்" என்றாரே பார்க்கலாம்!

– எஸ். கவிதா, திருநெல்வேலி.

ஒற்றைக்காலில் நிற்கும் பூநாரைகள்!

மிக நீண்ட கழுத்துடைய பிராணி எது என்று கேட்டால் உடனே ஒட்டகச் சிவிங்கி என்று சொல்லிவிடுவீர்கள்! அதே போல் நீண்டு, வளைந்த கழுத்துடைய ஒரு பறவை இருக்கிறது. அதுதான் பிளமிங்கோ. இந்த பிளமிங்கோவைத்தான் நாம் நாரை, பூநாரை, செங்கால் நாரை என பலவிதங்களில் அழைக்கின்றோம்.

இந்தியா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற வெப்ப மண்டலப் பகுதிகளில் நாரைகள் காணப்படுகின்றன.

இவற்றின் கழுத்து நீண்டு பாம்பு போல் வளைந்திருக்கும். அதே போல் கால்கள் மெல்லியதாகவும் நீண்டும் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

வலிமை வாய்ந்த, பெரிய வளைந்த அலகும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விஷயம். அலகில் பாதி இளஞ்சிவப்பாகவும் நுனிப்பகுதி கறுப்பாகவும் இருக்கும். பூநாரை மிகவும் அழகான கண்கவர் வண்ணங்களுடைய வித்தியாமான பறவை.

இவை ஆயிரக்கணக்கில் கூட்டமாக வசிக்கக் கூடியவை. ஆறு, ஏரி, குளம், கழி, கடற்கரை, சதுப்பு நிலம், மழை நீர் தங்கியுள்ள பள்ளம் போன்ற இடங்களிலும் அதற்கு அருகிலும் வசிக்கின்றன.





நீரில் நன்றாக நீந்தக் கூடியவை பூநாரைகள். ஆழமில்லாத இடங்களிலும் சேற்றிலும் நடக்கும். நீரில் நடப்பதற்கு ஏற்ற வகையில் முழங்கால் வரைக்கும் சிறகுகள் முளைத்திருக்காது.

மண்ணால் ஆட்டு உரல் போன்ற கூடுகளை தரையில் கட்டுகின்றன பூநார்ரைகள். கூட்டின் உயரம் 40 செ.மீ. அம்மணல் மேட்டின் மேற்புறத்தில் குழி ஒன்று இருக்கும். இக்குழியில் பெண் நாரை ஒன்று அல்லது இரண்டு முட்டைகளை இடும். வெண்மை கலந்த நீல நிறத்தில் முட்டை காட்சியளிக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்து அடை காக்கும்.

அடைகாக்கும் போது இந்தக் கூட்டின் மீது லாகவமாக கால்களை மடக்கிக் கொண்டு உட்கார்ந்

எஸ். சுஜாதா





சென்று விடுகின்றன. ஆயிரக் கணக்கான குஞ்சுகளில் ஒரு தாய் தன் குஞ்சை சரியாகக் கண்டு பிடித்து விடும். எப்படி தெரியுமா? வாச னையை வைத்துத்தான்!

தாய் இல்லாமல் தவிக் கும் குஞ்சுகளை அன் போடு வளர்க்கும் மற்ற தாய் நாரைகள்.

தரையில் நிற்கும் போது ஒரு காலை மடக் கிக் கொண்டு ஒற்றைக் காலில் நிற்பதை சாதா ரணமாகக் காணலாம். சில நேரங்களில் தலை யையும் இறகுக்குள் நுழைத்து தலை, ஒரு கால் இல்லாத விநோத பறவை போல் காட்சி தரும்.

பறக்கும் போது தலையைக் கழுத்தோடு சேர்த்து முன்னுக்குத் தள்ளிக் கொண்டும் கால்களைப் பின்னுக்குத் தள்ளிக் கொண் டும் அம்பு போல் பறக்கும். பறக்கும் போது இறகுகளில் உள்ள சிவப்பு, கறுப்பு வண்ணம் தெரியும். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். இனப் பெருக்கத்திற் காக நீண்ட தூரம் செல்லக் கூடியவை.

இரவில் நின்றபடியும், தலையை சிறகுக் குள் நுழைத்தும் தூங்குகின்றன.

இருக்கும்.

முட்டையிலிருந்து குஞ்சு வெளி வரும் போது இளஞ்சிவப்பு நிறத்துடன் காணப் படும் அலகு ஒரு வாரத்தில் நுனிப்பகுதி யில் கறுப்பாக மாறி விடும்.

குஞ்சுகள் வெண்மையான உடலுடன் காட்சி தரும். வளர்ந்த பின் உடலில் ஆங் காங்கு இளஞ்சிவப்பு, கறுப்பு நிறங்கள் தோன்றும். நன்கு முதிர்ச்சியடைந்த பூநாரைகள் சிவப்பாகக் காட்சியளிக் கும்.

இவை இரை பிடிப்பதைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். நீண்ட கழுத்தை தண் ணீருக்குள் முக்கி சேற்றைக் கலக்கும். சேற்றில் இருக்கும் புழு, பூச்சிகள், தாவரவிதை, மீன், தவளை, நத்தை போன்றவற்றை மண்ணோடு அல கால் எடுக்கும். பிறகு மண், தண் ணீரை வடி கட்டி விட்டு இரையை மட்டும் விழுங்கும்.

ஆயிரக்கணக்கான குஞ்சுகளை சில வயதான பூநாரைகளிடம் பார்த் துக் கொள்ளும்படி விட்டு விட்டு மற்றவைகள் எல்லாம் இரை தேடச்



● இந்தியாவில் உள்ள பறவைகளில் முக்கியமானது பிளமிங்கோ. இது phoenic opteridae என்னும் குடும்பத்தைச் சேர்ந்தது.

● மிருகக்காட்சி சாலைகளில் வளர்க்கப்படும் நாரைகள் இயற்கைச் சூழலில் வாழ்பவைகளைப் போல் இனப் பெருக்கம் செய்யாது.

● இனப் பெருக்கக் காலங்களில் மிக அதிகமாக சத்தத்தை எழுப்பக் கூடியவை. தன் இணையை அழைக்கவே இவ்வாறு குரலை எழுப்புகின்றன.

● உலகிலேயே லட்சக்கணக்கான பூநாரைகள் சேர்ந்து இனப் பெருக்கம் செய்யும் ஒரே இடம் குஜராத் மாநிலத்தில் இருக்கும் கட்ச் வளைகுடாவில் உள்ள நார்சரோவர் சரணாலயம்தான்.


● தமிழ் நாட்டில் கோடிக் கரை சதுப்பு நிலத்திலும் இவை வசிக்கின்றன.

● பூநாரைகளில் பல இனங்கள் உண்டு.




ஓவியப் போட்டி

முடிவுகள்



முதல் பரிசு


மு. சுரேஷ், பதினோராம் வகுப்பு,
மேட்டுப்பாளையம், வாணியம்பாடி.



இரண்டாம் பரிசு


பி. செந்தில்நாதன், கீழ்வேளூர்.

‘மே’ இதழில் ‘காய்கறிகள்’ என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.




டி. ஜோஷ்வின், ஐரேனிபுரம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

மூன்றாம் பரிசு



ஆறுதல் பரிசு

மனீஷா மணிமாறன்,
வடக்கன் குளம்,
நெல்லை மாவட்டம்.



ஆறுதல் பரிசு

எஸ். தியாகராஜன்,
பத்தாம் வகுப்பு,
முத்தையா அழகப்பா
மெட்ரிகுலேஷன் பள்ளி,
கோட்டையூர்.

கோகுலம் க்விஸ் முடிவு

ஆர்வத்துடன் நிறைய பேர் இப்போட்டியில் கலந்து கொண்டனர். ஆனால் சரியான விடைகளை அளிக்கவில்லை. சரியான விடைகளை அளித்த பதிமூன்று பேருக்குப் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. வெ. நடராஜன், திருநெல்வேலி.
2. என். கௌரி, மணலி, சென்னை.
3. எம். கணேஷ், எடப்பாடி, சேலம்.
4. க. அட்சயா, புலியூர், கரூர் மாவட்டம்.
5. இ. நெடுஞ்செழியன், எட்டாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, திருவள்ளூர் மாவட்டம்.
6. சி. ப்ரீத்தி, முசிறி, திருச்சி.
7. வி. வேங்கடசுப்ரமணியன், சென்னை.
8. பி. குமரவேல், பச்சாபாளையம், ஈரோடு மாவட்டம்.
9. டி.எஸ். அறிவழகன், திருப்புலிவனம், காஞ்சிபுரம் மாவட்டம்.
10. ஆதர்ஷ் கோபி, அரும்பாக்கம், சென்னை.
11. எஸ். சூர்யா, மதகுசாலை, முள்ளங்குடி அஞ்சல்.
12. பி. ரவிச்சந்திரன், பென்னாகரம் அஞ்சல், தருமபுரி மாவட்டம்.
13. கே. சோபன் பாபு, மச்சுவாடி அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம்.

சரியான விடை :

1. தாஜ்மஹால் **யமுனை** ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.
2. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு **நார்வே.**
3. பாலைத் தயிராக மாற்றுவது **பாக்டீரியா**
4. ஈக்கு **நான்கு** இறகுகள்.
5. பூகம்பத்தைக் கண்டறிய உதவும் கருவி **சீஸ்மோ மீட்டர் அல்லது பூகம்பமானி.**
6. நேபாளின் தலைநகர் **காட்மண்டு.**
7. இந்தியாவின் மிக உயர்ந்த மலைச் சிகரம் **கஞ்சன்ஜங்கா.**
8. சர் ஹம்ரி டேவி கண்டுபிடித்த வாயு **குளோரின்.**
9. சமீபத்தில் ஹாட்ரிக் சாதனை படைத்த கிரிக்கெட் வீரர் **வாசிம் அக்ரம்.**
10. சந்திரனில் முதலில் காலடி எடுத்து வைத்தவர் **நீல் ஆம்ஸ்ட்ராங்.**

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.

காளான்



இடியும் மழையும் வரும்போது
எங்கும் மண்ணில் முளைக்கிறது.
கொடியும் இலையும் அதற்கில்லை
குறுகிய நாளே அது வாழும்.

பட்டுப் போன்று மெதுமெதுவாய்
பார்க்கப் பார்க்க அழகுதரும்.
குட்டை யாக இருந்தாலும்
குணத்தில் அதற்கு ஈடில்லை.

சாம்பல் நிறமும் வெண்நிறமும்
சமமாய் கலந்து அது வளரும்
வேம்பின் குணமும் சிலவற்றில்
விடமும் கூட அதில் இருக்கும்.

வட்ட வடிவம் அதன் வடிவம்
வண்ணம் கண்ணின் முன்நிற்கும்
பஞ்சுப் போன்ற மென்மையுடன்
பாங்காய் நமக்குக் காட்சி தரும்!

— அழகனார்

சார் தபால்!

✉ லால்பேட்டையிலிருந்து **எம்.எஸ். உம்மு அம்மாரா** "இன்றைக்கு பெரும்பாலான சிறுவர் இதழ்கள் சிறுவர்களின் படைப்புகளை வெளியிட ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் என்னைப் போன்ற சிறுவர்களின் படைப்புகளை தயங்காமல் திருத்தி வெளியிடுவது கோகுலம் மட்டுமே! என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சரி! பிருந்தாவனக் கதையரங்கம் ஏன் வெளியிடப்படுவதில்லை?" என்கிறாள்.

பிருந்தாவனக் கதையரங்கம் என தலைப்பு வெளியிடாமல் ஒரு பக்கக் கதையாக வெளியிடுகிறோமே! பார்க்கவில்லையா அம்மாரா?

✉ "பாலைவனத்தில் தாவரங்களில் கள்ளிச் செடியும், விலங்குகளில் ஒட்டகமும்தான் வாழ்கின்றன என இதுவரை நினைத்திருந்தேன். பாலைவனங்களில் இத்தனை உயிரினங்கள் வசிப்பதை ஜூன் இதழ் மூலமே அறிந்து கொண்டேன்" என்கிறார் **செ. சரவணக்குமார், சாத்தூர்.**

✉ ஆறாம் வகுப்பு படிக்கும் **மல்லிபாளையம் த. சிவபாரதி** "மின்கல மாதவன் தொடர்கதை படு சூப்பர்! எட்டு மாதத்திலேயே மாதவன் எங்களை விட்டுப் பிரிந்ததை நினைத்து மிகவும் வருத்தமாக இருக்கிறது" என்று சொல்கிறான்.

✉ "ரேவதியின் மின்கல மாதவன் தொடர் கதையில் த்ரில், விறுவிறுப்பு, சுவாரசியம் எல்லாமே இருந்தது. அதற்கேற்ப ஓவியரின் வண்ணப் படங்களும் அருமை. மொத்தத்தில் நிறைவான கதை" என்கிறார்கள் **கே. ஆர்த்தி சேலம், எம். ஹுசைன் திருநின்றவூர், வி. வேல்மணி அருப்புக்கோட்டை.**

✉ ஒன்பதாம் வகுப்பு படிக்கும் **எஸ். புஷ்பா** "அருமையான கதை கொடுத்த ரேவதி அவர்களுக்கு ஒரு கூடை நிறைய மாம்பழங்களைப் பரிசாக அளிக்கலாம்!" என்கிறாள்.


கூடை நிறைய மாம்பழங்கள்!

✉ "ஆஹா! மீண்டும் வாண்டுமாமா!- இப்படிச் சொல்வது நான் மட்டும் அல்ல. எங்கள் வீட்டுப் பெரியவர்களும்தான்!" என்கிறான் செங்கல்பட்டைச் சேர்ந்த **ஆர். வேல்முருகன்.**


✉ புதுக்கோட்டையிலிருக்கும் **எம். தேவி** "கோகுலத்தில் வரும் விடுகதையை குடும்பத்துடன் ஆர்வமாகப் படித்து விடையைக் கண்டுபிடிப்போம். இது ரொம்ப ஜாலியாக இருக்கும். மே மாத கோகுலத்தில் வந்த ஒவ்வொரு விடுகதையும் நன்றாக இருந்தது. ஆனால் ஜூன் இதழில் விடுகதையை எதிர்பார்த்த எங்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. விடுகதையை தொடர்ந்து வெளியிடுங்கள். இது என் அன்பு வேண்டுகோள்" என்கிறாள்.

✉ "பாம்பு படத்தைப் பார்த்து பயந்து போனேன். பாம்புகள் பலவிதம், அவை ஒவ்வொன்றும் ஒருவிதம்! மகுடி இசைக்குப் பாம்பு ஆடாது, நாகப்பாம்பும் சாரைப் பாம்பும் சேராது என்ற உண்மையை நன்றாக விளக்கியிருந்தீர்கள்" என்கிறாள் **பெரிய தச்சூரிலிருக்கும் நிர்மலா**


✉ "உலகக் கோப்பை கிரிக்கெட்டில் பங்கேற்கும் பன்னிரெண்டு நாடுகளின் கேப்டன்களைப் போட்டு, அவர்களைப் பற்றிய தகவல்களையும் அளித்த கோகுலத்துக்கு தாங்ஸ்" என்கிறார்கள் **எஸ். விஜய் ராஜா மதுரை, வி.மாணிக்கம், திண்டுக்கல், சுமதி திருச்சி.**



ராஜ மரியாதை!




சிங்கம், புலி வசிக்காத காடு. சோனு என்ற யானை அரசனாக இருந்தது. சோனு ராஜா ஆட்சியில் பிராணிகள் எல்லாம் மகிழ்ச்சியாக வாழ்ந்தன.




ஒரு நாள் சோனு ராஜாவிற்கு அணிலார் பழங்கள் கொண்டு வந்து கொடுத்தார்.


கதை : கங்கா கணேசன் படம் : சசி



அவ்வளவுதான்! ராஜாவிற்குக் கோபம் வந்து விட்டது. "பிறர் உழைப்பில் வாழ நான் விரும்பவில்லை" என அணிலாரிடம் கூறினார் சோனு ராஜா.




சோனு ராஜாவின் கொள்கையை நினைத்து மற்ற பிராணிகள் மகிழ்ந்தன.
ஒரு நாள் பக்கத்துக் காட்டிலிருந்து வந்த நரியார் சோனு ராஜாவைச் சந்தித்தார்.




"எனக்கு இக்காட்டில் ராஜ மரியாதை தரப்படவில்லை" என நரியார் கோபத்துடன் முறையிட்டார்.
"இங்கு அனைவரும் சமம். விரும்பினால் தங்கலாம்" என சோனு ராஜா கூறினார்.




கோபம் கொண்ட நரியார் எப்படியாவது சோனு ராஜாவுக்கு அவப் பெயர் ஏற்படுத்தத் திட்டம் போட்டார்.




உடனே காட்டில் உள்ள அனைத்துப் பிராணிகளையும் அழைத்துக் கூட்டம் போட்டார் நரியார். "நல்ல மனம் படைத்த ராஜாவுக்கு ஒரு விழா எடுக்க வேண்டும்" என வேண்டினார்.




இதை ஏற்றுக் கொண்ட மற்ற பிராணிகள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தன.



விழாவிற்கு முதலில் சம்மதம் தெரிவிக்காத சோனு ராஜா எல்லோரின் அன்புத் தொல்லையால் சம்மதித்தார். விழா அன்று ராஜா உணவு தேடிச் செல்ல வேண்டாம் என நிபந்தனை போட்டார் நரியார்.



விதவிதமான பதார்த்தங்கள் ராஜாவின் இருப்பிடத்திற்கே வந்தன. மிகவும் சுவைத்துச் சாப்பிட்டார் சோனு ராஜா.




விழா இனிதே முடிந்தது. அன்று இரவு சோனு ராஜா சோகத்தில் இருந்தார். இதை அறிந்த நரியார் அருகில் வந்து விசாரித்தார். "இன்று கிடைத்த ராஜ மரியாதையும் உபசரிப்பும் நாளை கிடைக்காதே" என வருந்தினார் ராஜா.



''நீங்கள் மனது வைத்தால் எல்லாம் நடக்கும். தங்களின் செல்வாக்கை நாளையிலிருந்து பயன்படுத்த வேண்டும்'' என ஆலோசனை கூறினார் நரியார்.




மறுநாள் சோனு ராஜா நகர்வலம் வந்தார். பிராணிகள் ராஜாவைக் கண்டு கொள்ளாமல் தங்களது வேலைகளில் ஈடுபட்டன.
ராஜாவுக்குக் கோபம் வந்து ''தனக்கு அடிபணிந்து நடக்க வேண்டும்'' என உத்தரவு போட்டார்.




''தினமும் தனக்குத் தேவையான உணவைக் கொண்டு வந்து தர வேண்டும்'' என்றார் ராஜா. மிகவும் கொடுமைக்கார அரசராக மாறினார்.



சோனு ராஜாவைக் கண்டாலே பிராணிகள் அனைத்தும் பயந்து ஓடி ஒளிய ஆரம்பித்தன.




ஒரு நாள் எலியார் உணவு கொண்டு வரவில்லை என கோபம் கொண்ட ராஜா அதை மிதிக்க ஓடினார்.




செடி, கொடிகள் அடர்ந்த புதருக்குள் எலியார் ஓடி மறைந்தார். புதருக்குள் சென்ற சோனு ராஜா வசமாகச் சிக்கிக் கொண்டார்.
காலில் முள் குத்தக் கதறினார். நரியாரைக் காப்பாற்றும்படி வேண்டினார்.



நரியார் அவசர வேலை இருப்பதாகக் கூறி ஓடிவிட ராஜா துயரத்தில் ஆழ்ந்தார்.



ராஜாவின் துயரத்தைக் கண்ட எலியார் உறவினர்களுடன் வந்து கொடிகளைக் கடித்து அகற்றினார்.



காலில் இருந்த முட்களை அகற்றி மானார் மருந்து போட்டார்.



அனைவரின் நல்ல உள்ளத்தையும் புரிந்து கொண்ட சோனு ராஜா மன்னிப்புக் கேட்டார். மீண்டும் நல்லவிதமாக அரசாண்டார்.

தக்காளிச் செடி பரிசு வாங்குமா?

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



காட்சி - 1
இடம் : மாது வீடு

அப்பா : லீலா, லீலா!

லீலா : என்னப்பா?

அப்பா : மாது தினமும் காலையிலே ஒரு தடவை, மாலையிலே ஒரு தடவை சின்ன பக்கெட்லே தண்ணி எடுத்துக்கிட்டு தோட்டத்துப் பக்கமா போறானே, எதுக்கு?

லீலா : நம்ம வீட்டுப் பின்புறத் தோட்டத்து மூலையிலே அவன் நாலைஞ்சு தக்காளி நாத்துகளை நட்டு வளர்த்துக்கிட்டு வரான்பா! அதுக்குத் தண்ணி விடத்தான்...

அப்பா : அப்படியா? திடீர்னு எப்படி அவனுக்கு இந்த எண்ணம் வந்தது?

லீலா : அவன் பள்ளிக்கூடத்துலே தாவரவியல் டீச்சர், ஒரு போட்டி வச்சிருக்காங்களாம்!

அப்பா : என்ன போட்டி?

லீலா : அந்த டீச்சர் எல்லா பிள்ளைகளுக்கும் நாலைஞ்சு தக்காளி நாத்துக்களைக் கொடுத்து அதை அவங்க அவங்க வீட்டுத் தோட்டத்துலே வளர்த்துக்கிட்டு வரச் சொல்லியிருக்காங்களாம். மூணு மாசம் கழிச்சு ஒரு நாள் எல்லார் வீட்டுக்கும் வந்து பார்ப்பாங்களாம். யார் வீட்டுச் செடி நல்லா உயரமா ஆரோக்கியமா வளர்ந்திருக்கோ அவங்களுக்கு சிறப்புப் பரிசு தரப் போறாங்களாம்.

அப்பா : அப்படியா? மாது நட்ட தக்காளிச் செடிகள் நல்லா வளர்ந்திருக்கா? பார்த்தியா நீ?

லீலா : இதுவரைக்கும் பார்க்கலே. அந்தச் செடிகளை நாம யாரும் இப்ப பார்க்கக் கூடாதாம். திடீர்னு ஒருநாள் நம்ம கிட்டே செடிகளைக் காட்டி ஆச்சரியப்பட வைக்கப் போறானாம்! அதனாலதான்.

காட்சி - 2
இடம் : மாது வீடு

லீலா : மாது! இன்னிக்கு மாலை நாலு மணிக்கு நம்ம பள்ளிக்கூடத்துலே ஒரு பாராட்டு விழா இருக்கு, தெரியுமில்லே?

மாது : அர்ஜுனுக்குத்தானே? நான் வரலே. நீ போயிட்டுவா...

லீலா : மாது. அர்ஜுன் உன் வகுப்புத் தோழன். போன குடியரசு தினத்தன்று குடியரசுத் தலைவரிடமிருந்து வீரச் செயலுக்கான விருது வாங்கியிருக்கான். அதுக்குத் தானே பாராட்டு விழா நடக்கப் போகுது. நாமும் பாராட்ட வேண்டாமா?

அப்பா : என்ன வாக்குவாதம் நடக்கறது?

லீலா : அப்பா, இவன் வகுப்பிலே அர்ஜுன்னு ஒரு பையன். அவன் ஒருநாள் சாரணக் குழுவோடு ஒரு மலைப்பகுதிக்கு 'கேம்ப்' போயிருக்கான். போன இடத்துலே ஒரு காட்டாறு. அதிலே வெள்ளம் வேகமா போய்க்கிட்டிருந்ததாம். அந்த வெள்ளத்திலே யாரோ ஒரு பையன் மாட்டிக்கிட்டு, நீச்சல்

தெரியாம திணறிக்கிட்டிருந்தானாம். அதைப் பார்த்த அர்ஜுன் கரையிலே இருந்த ஒரு மரத்துமேல மடமடன்னு ஏறி, மரத்துலே கயிறு மாதிரி படர்ந்து இருந்த ஒரு உறுதி யான பச்சைக் கொடியை இழுத்து, அதை அந்தப் பையனுக்கு நேர வெள்ளத்திலே தொங்கவிட்டிருக்கான். அந்தப் பையனும், அந்தக் கொடியைப் பிடிச்சுக்கிட்டு மேல ஏறி, கரைக்கு வந்து சேர்ந்திருக்கான். அதுக்காகத் தான் அர்ஜுனுக்கு அரசாங்கம் விருது வழங்கியிருக்கு. பள்ளிக் கூடத்துலேயும் பாராட்டு விழா நடத்தறாங்க. அதுக்கு இவன் வரமாட்டேங்க றான்.

அப்பா : மாது! இந்த மாதிரி ஒருத்த ரோட திறமையையும், துணிச்சலையும் பாராட்டுகிற நிகழ்ச்சிக்கு நாமும் கட்டாயம் போகணும். நாலு வார்த்தை பேசி, அவங் களைப் பாராட்டணும்.

மாது : நான் வரலே. அவசரமா வேணு வீட்டுக்குப் போகணும். அவனுக்கு இன்னிக் குப் பிறந்த நாள்.

அப்பா : யாரது வேணு?

லீலா : போன வாரம் கூட நம்ம வீட் டுக்கு வந்திருக்கான்பா! தலையைக் கூட ஒழுங்கா வாராம, மரியாதை இல்லாம பேசிக் கிட்டு ஒரு பையன் வந்தானே...

அப்பா : ஓ... அவனா?

லீலா : டேய் மாது! அவனைப் பத்தி பெரிசா நினைச்சுக்காதே! பலதடவை, பொய் சொன்ன துக்காக அவன் அப்பா கிட்டே அடி வாங்கி யிருக்கான். வகுப்புக் குக் கூட நேரம்



கழிச்சுத்தான் வருவான்.

அப்பா : அப்படியாடா மாது?

மாது : அதெல்லாம் எனக்குத் தெரியாது.

லீலா : ஒரு தடவை வகுப்பிலே பரீட்சையில் காப்பியடிச்சதுக்காக டீச்சர்கிட்டேயும் நல்லா அடி வாங்கியிருக்கான்.

மாது : ஏ லீலா! நீ பாட்டுக்கு அவனைப் பத்தி அடுக்கிக் கிட்டே போகாதே! இதோ பார். அவன்தான் எனக்கு இந்தப் பேனாவை அன்பளிப்பா கொடுத்திருக்கான் தெரியுமா?

லீலா : ஓஹோ, அதான் வேணுவைக் குறை சொன்னா உனக்கு இவ்வளவு கோபம் வருதோ?

அப்பா : மாது, லீலா சொல்றதைப் பார்த்தா வேணு உனக்கு நல்ல நண்பனா இருக்க மாட்டான்னுதான் தோணுது. அவன் நட்பை விட்டுடு!

மாது : போங்கப்பா.. அவன் நல்லவன்தான். போயிட்டு வரேன்.

லீலா : மாது, நீ இன்னிக்கு தக்காளிச் செடிக்குத் தண்ணி விடலே. நினைவு வச்சுக்க.

மாது : ஆமாம், நல்ல வேளையா நினைவு படுத்தினே... அநேகமா அடுத்த வாரமே டீச்சர் தக்காளிச் செடிகளைப் பார்க்க வருவாங்க!


காட்சி - 3
இடம் : மாது வீடு


லீலா : அப்பா இதோ பாருங்க! நான் முதல் வரிசையிலே உட்கார்ந்துக்கிட்டிருக்கேன்.

அப்பா : நல்லா விழுந்திருக்கே லீலா! நீ அர்ஜுனைப் பாராட்டி கவிதை படிக்கற போது எடுத்த போட்டோ கூட நல்லா, இருக்கு! டேய் மாது, இதோ பாருடா! அர்ஜுன் தன்னோட போட்டோ ஆல்பத்தை நாம பார்க்கறதுக்காக அனுப்பியிருக்கான்.

மாது : இப்போ ஆல்பம் பார்க்க எனக்கு நேரமில்லே! அவசரமா வேணு வீட்டுக்குப் போய்க்கிட்டிருக்கேன்.

அப்பா : டேய் மாது! இங்கே வா! நான் கூட வேணுவைப் பத்தி நேத்துதான் கேள்விப் பட்டேன். அவனோடு பழகறத நீ விட்டுடு. இல்லேன்னா அவன் கிட்டே இருக்கற கெட்ட பழக்கங்கள் உங்கிட்டேயும் வந்துடும். அப்புறம் அந்தப் பழக்கங்களை உன்





''மாஜிக் செய்பவருக்கு எந்தக் கதை பிடிக்கும்?''

''பஞ்ச 'தந்திர'க் கதைதான்!''

– இரா. ஆதிநாராயணன், தஞ்சாவூர்.

னால விட முடியாது. இந்த ஆல்பத்தைப் பார்! அர்ஜுனுக்கு எவ்வளவு பெரிய மனிதர்கள் மாலை, பொன்னாடை போர்த்தி வாழ்த்தறாங்க!

லீலா : படிப்பிலே கூட அவன் ரொம்ப கெட்டிக்காரன்.

அப்பா : மாது, போன வருஷம் உன் பிறந்த நாள் வந்தபோது நீயும் அர்ஜுன் மாதிரியே பேர் எடுக்கணும்னு ஆசைப்பட்டே, நினைவிருக்கா?

மாது : என்னால முடியாதுப்பா!

அப்பா : முடியாதுன்னு சொல்றதை விட்டுடு. நீ மனசு வச்சா நிச்சயம் எல்லாம் முடியும்.

லீலா : வேணு கொடுத்த பேனாவை ரசிச்சது போதும். அப்பா சொன்னதைக் கேட்டுக்க!

காட்சி - 4
இடம் : மாது வீடு

மாது : அப்பா இவங்கதான் எங்க டீச்சர்!

அப்பா : அப்படியா? வாங்க, வணக்கம்!

டீச்சர் : சார், உங்க பிள்ளை வளர்த்துக்கிட்டு வர தக்காளிச் செடிகளைப் பார்க்க வந்திருக்கேன்.

அப்பா : பாருங்க, இவன் செடி வளர்க்கறது ரெண்டு நாள் முன்னாடிதான் தெரியும். நான் கூட இதுவரைக்கும் பார்க்கலே, வாங்க பார்க்கப் போகலாம்.

டீச்சர் : பரவாயில்லையே! வீட்டுக்குப் பின்னால இவ்வளவு பெரிய தோட்டம் வச்சிருக்கீங்க!

மாது : டீச்சர், இதோ இப்படி வாங்க. இதுதான் நான் வளர்க்கற தக்காளிச் செடிகள்! இந்தச் செடிக் கூட்டம் நடுவிலே நட்டு வளர்த்திருக்கேன் பாருங்க!

டீச்சர் : என்ன மாது இது. இந்த மூணு மாசத்துலே நாலு அடிக்கு செழிப்பா வளர்ந்திருக்க வேண்டிய தக்காளிச் செடி ஒரு அடி கூட வளரலே! இலைகளெல்லாம் சுருங்கிக் கிடக்கு.

மாது : நானும் தினமும் தவறாம தண்ணி விட்டுக்கிட்டு வரேன் டீச்சர்.

டீச்சர் : தண்ணி மட்டும் போதாது மாது! இதோ பார்! இந்த நாலு தக்காளிச் செடிகளைச் சுற்றி எவ்வளவு காட்டுச் செடிகள் வளர்ந்து கிடக்கு. உபயோகமில்லாத இந்தக் காட்டுச் செடிகளையெல்லாம் நீ மொதல்லேயே வேரோடு பிடுங்கி எறிஞ்சுட்டு அப்புறமா தக்காளி நாத்துகளை நட்டு வளர்த்திருக்கணும். இந்தக் காட்டுச் செடிகளோட வேர்தான் உன் தக்காளிச் செடிகளோட வளர்ச்சியைக் கெடுத்திருக்கு. இந்தக் காட்டுச் செடிகளோட கிளைகள் உன் தக்காளிச் செடிகளை வளரவிடாம அழுத்திக்கிட்டிருக்கு! செடிகளுக்குப் போதிய சூரிய ஒளியும் கிடைக்கலே.

அப்பா : ஆமாம் மாது, தக்காளிச் செடிகளுக்குக் கிடைக்க வேண்டிய சத்தை இந்தக் காட்டுச் செடிகளே உறிஞ்சி வளர்ந்திருக்கு.

டீச்சர் : இந்தக் காட்டுச் செடிகள் குட்டிச் செடிகளாயிருந்தபோதே அவைகளைப் பறித்து எறிஞ்சிருக்கணும்....

மாது : அப்போ எனக்குப் பரிசு...

டீச்சர் : கிடைக்காது மாது, நான் வரேன்.

அப்பா : மாது, என்னடா சோர்ந்து போய் உட்கார்ந்துட்டே? மொதல்லேயே எங்கிட்டே இதைப் பத்தி சொல்லியிருந்தா, இந்தக் காட்டுச் செடிகளைப் பறிக்கச் சொல்லியிருப்பேன்.

லீலா : நீங்க சொல்லியிருந்தா கூட இவன் கேட்டிருக்க மாட்டான். வேணுவோட நட்பை விட்டுடுன்னு எவ்வளவு தடவை சொன்னீங்க. இன்னும் கேட்கலை.

அப்பா : மாது, இப்பவாவது ஒரு உண்மையைப் புரிஞ்சுக்க. வேணு தெரிஞ்சோ தெரியாமலோ நல்ல பழக்கங்களை வளர்த்துக்கல... வேணுவோட நட்பு இந்தக் காட்டுச் செடிகள் மாதிரிதான்.


மாது : இப்ப புரியறதுப்பா. இனிமே நான் வேணுவோட நட்பை விட்டுடறேன். இந்தக் காட்டுச் செடிகளை இப்பவே பறிச்சுப் போட்டுடறேன்!

லீலா : இந்தக் காட்டுச் செடிகளைப் பறித்ததுக்காகவாவது உனக்கு வீரவிருது நிச்சயம்!

(சிரிப்பலைகள்)

கோகுலம் க்விஸ்!

1. ஸ்வீடன் நாட்டின் தலைநகர் ______
2. மின்னோட்டத்தைக் கண்டுபிடித்தவர் ______
3. காவிரி ______ மலையில் உற்பத்தியாகிறது
4. பூமி தன்னையும் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது என்பதைக் கண்டறிந்தவர் ______
5. இரண்டு முறை உலகக் கோப்பையை வென்ற மேற்கிந்தியத் தீவு கேப்டன் ______
6. கரும்பு ______ இனத் தாவரம்.
7. பட்டுத் துணியை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் ______
8. நம் உடலில் உள்ள பெரிய உறுப்பு______
9. காற்றை அளக்க உதவும் கருவி______
10. பாரதியார் பிறந்த ஊர் ______




மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்து கேள்விகளுக்கும் சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள். விடைகளை எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். உங்கள் முகவரியைக் குறிப்பிட மறவாதீர்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி **31.7.99**

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097





பூமிக்குள் புதைந்த ஏரி!

கால் பந்தாட்டம்


கால் பந்தாட்டத்தின் பிறப்பிடம் சீன நாடாகும். இரண்டு கம்பங்களில்



குறுக்காகக் கட்டப்பட்ட பட்டு வலையில் ஓரடி விட்டமுள்ள பெரிய துளையில் பந்து போய் விழ வேண்டும். அதுதான் 'கோல்'! இயேசு கிறிஸ்துவுக்கு முன்பே கால் பந்தாட்டம் தோன்றி விட்டது. கிரேக்க மாமன்னன் அலெக்ஸாண்டர் தீவிர கால்பந்து ரசிகன். அவனுடைய போர் வீரர்கள் மாஸிடோனியாவிற்குக் கால் பந்தை எடுத்துச் சென்றனர். அப்போது நடந்த கிரேக்க-ரோமானியப் போரில் வெற்றியடைந்த ரோமானியர்கள், கிரேக்க வீரர்களிடமிருந்து இந்த விளையாட்டைக் கற்றுக் கொண்டனர். நேர்முக வர்ணனையும் அக்காலத்திலேயே இருந்திருக்கிறது! இந்த நேர்முக வர்ணனையை முதன் முதலாக அறிமுகப் படுத்தியவர் 'ஆன்டிஃபேன்ஸ்' என்ற கிரேக்க நாடகாசிரியர் என்கிறார்கள்.

கால்பந்து ஒரு கண்ணோட்டம் என்ற நூலில் இருந்து
– எல். கோபாலகிருஷ்ணன்

வாசம்




ஒவ்வொரு உயிரினமும் தன் உடலிலிருந்து தனித்தனி வாசனையைக் காற்றில் கலக்கிறது. வண்ணத்துப் பூச்சி தன் வாசனையால் பல மைல்களுக்கப்பாலுள்ள தன் இணையைக் கவரும்.

உலக அதிசயங்கள் நூலிலிருந்து,
–பி. ராஜசேகரன்

பற்கள் எத்தனை?

ஒரு யானை ஒரு நாளைக்கு அரை டன் அளவு உணவு சாப்பிடும். யானைக்கு மொத்தம் 24 பற்கள் இருக்கும். இவை ஒரேயடியாக முளைப்பது இல்லை.



நான்கு முறை பல் விழுந்து முளைக்கும். 45 வயதான யானைக்கு அதனுடைய கடைசிப் பற்கள் நன்றாக வளர்ந்திருக்கும். அவற்றின் எடை ஒவ்வொன்றும் நான்கு கிலோ!

– இரா. கமலக்கண்ணன்,
நாமகிரிப்பேட்டை

குடை

முதன் முதலில் குடை கண்டுபிடித்தது வெயிலிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான். அம்ப்ரா என்ற லத்தீன்




சொல்லுக்கு 'நிழல் தரும்' என்று பொருள். இதுவே ஆங்கிலத்தில் அம்ப்ரெல்லா என்றாகியது.

ஆதாரம்: எப்படி வந்தது?
– கே.ஆர். ரவீந்திரன்

மறைந்த ஏரி!

பூமிக்கு அடியில் புதைந்த நகரங்களைக் கண்டுபிடிப்பது நாம் அறிந்த செய்தி. அதே போன்று ஏரிகளும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்




காவில் டென்னெஸ்ஸி மாநிலத்தில் கிரேய்ஹௌட் கேவர்ன்ஸ் என்ற இடத்தில் 1905ஆம் ஆண்டு பூமிக்கு அடியில் 300 அடிக்கும் கீழே ஓர் ஏரி கண்டுபிடிக்கப்பட்டது. பத்தரை ஏக்கர் பரப்பளவுள்ள இந்த ஏரியைத் 'தொலைந்த கடல்' என்கிறார்கள். கடல் என அழைக்கப்பட்டாலும் இந்தத் தொலைந்த கடலின் நீர் மிகச் சுவையானதாகவும்! இனிப்பானதாகவும் இருந்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் ஊகிக்கிறார்கள்.

எத்தனை பேர்?

சர்வதேச ஃபுட்பால் பெடரேஷன் 1904ல் அமைக்கப்பட்டபோது இடம் பெற்ற நாடுகள் ஏழே ஏழுதான். இந்த பெடரேஷன் அமைக்கப்பட்ட பிறகே கால்பந்துப் போட்டியில் 11 பேர்கள் பங்கு கொள்ளும் விதி உருவாக்கப்பட்டது. அதற்கு முன்பு ஏழு அல்லது ஒன்பது பேர்கள் வீதமே ஆடினார்கள்!





கனவு


மனிதனைப் போலவே பூனையும் தூங்கும் போது ஒவ்வொரு 20 நிமிடத்திற்கு ஒருமுறை கனவு காண்கிறதாம். அதன் மீசை துடிப்பதே கனவு காண்கிறது என்பதற்கு அடையாளம்.

– எம். சகிலாபானு

நிதானிப்பது ஏன்?

சாரி சாரியாகச் செல்லும் எறும்புகளில் சில அவ்வப்போது நின்று நிதானித்து விட்டு மீண்டும் செல்வதை நீங்கள் பார்த்திருக்கலாம். இந்தத் தாமதம் எதற்கு?

இவை இப்படித் தயங்கித் தயங்கி




நிற்கும் போது மிக நுண்ணியதொரு வாசனையை விட்டுச் செல்லுகின்றன. பின்னால் வரும் எறும்புகள் இந்த வாசனையைப் பிடித்துக் கொண்டு முன்னேறித் தங்கள் இருப்பிடங்களை அடைகின்றன.

மின்னல்கள்!

மின்னல்கள் ஒரு நாளைக்கு 40,000த்திலிருந்து 50,000 தடவைகள் பூமியைத் தாக்குகின்றன.

ஒரு பெரிய 'மின் உற்பத்தி நிலையம்' தரக் கூடிய மின்சாரத்தை– அதாவது ஒரு மில்லியன் கிலோ வாட் மின்சாரத்தை ஒரு மின்னல் பெற்றிருக்கிறது.

மின்னல்கள் பூமியிலிருந்து 5000முதல்




10000 மீட்டர் உயரத்தில் உருவாகி வருகின்றன.

மின்னலின் வால் முனைக்கு 'இரோனாஸ்டீமர்' என்று பெயர்.

நிறம் சிகப்பல்ல

செங்கடல் சிகப்பாக இருக்காது. 'எடாம்' என்ற மலையின் நிழல் இதில் தெரிகிறது. ஹீப்ரு மொழியில் 'எடாம்' என்றால் சிவப்பு எனப் பொருள்படும்.



ஆகவே பின்னால் இதைச் செங்கடல் என்று தவறாக அழைக்கலாயினர்.

–ஆர்.ஆர். பூபதி

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் மூன்றாவது கதை



கொள்ளையரின் மனமாற்றம்!

அடர்ந்த காடு ஒன்றில் ஒரு கூட்டம் கால்நடையாகப் பயணம் செய்து கொண்டிருந்தது. அக் கும்பலில் ஆண்கள், பெண்கள், முதியோர், குழந்தைகள் அனைவரும் இருந்தனர். அவர்கள் ஊரை விட்டு வேலைக்காக வெளியூர் செல்பவர்கள்.

அக்காலத்தில் தற்போது இருப்பது போல இயந்திரத்தினால் இயங்கும் ஊர்திகள் எதுவும் கிடையாது. நடுத்தர வசதி உடையவர்களும் வறியவர்களும் கால்நடையாகவே செல்வர்.

அந்தக் காடு சற்று நீளமானது. அக்காட்டினுள் அடர்ந்த மரங்களும் அதிகம். எனவே வெயில் எதுவும் தெரியாது என்றபோதிலும் நடப்பவர்கள் களைப்பு அடையும் போது மரத்தடியில் அமர்ந்து ஓய்வு எடுப்பார்கள். காட்டிற்குள் பயணப்பட்ட அந்தக் கூட்டம் ஆங்காங்கே வழியில் தங்கி இளைப்பாறிக் கொண்டும் கையில் கிடைத்த பொருள்களைக் கொண்டு அடுப்பு மூட்டி உணவு சமைத்து உண்டவாறும் முன்னேறிச் சென்றது.

மூன்று நாள் வரை பயணிகளுக்கு எந்தவிதத் துன்பமும் ஏற்படவில்லை. நான்காவது நாள் காலையில் அவர்கள் எழுந்து நடக்கத் தொடங்கினார்கள். சிறிது நேரத்தில் கொள்ளையர் கும்பல் ஒன்று அக்கூட்டத்தாரைச் சுற்றி வளைத்தது.

"இருக்கக்கூடிய எல்லாவற்றையும் எடுத்து என் முன்னே வையுங்கள்" என்று கொள்ளையர் தலைவன் உரத்த குரலில் கூறினான்.

அவன் முன் அகலமான முரட்டுத் துணி ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. பயணிகள் நடுநடுங்கிப் போனார்கள்.

"எவரேனும் கொடுக்க மறுத்தாலோ, கொடுக்காமல் மறைத்தாலோ ஈவு இரக்கமின்றி கொல்லப்படுவீர்கள். நீங்கள் அனைவரும் உயிருடன் செல்ல விரும்பினால் மரியாதையாகத் துணியின் மேல் உங்கள் பொருள்களைப் போட்டு விடுங்கள். என்னிடமிருந்து தப்பிக்க விரும்பினால் உடைமைகளோடு உயிரையும் இழந்து விடுவீர்கள்" என்று கொள்ளையர் தலைவன் மீண்டும் எச்சரித்தான்.

முதலில் உயிருக்கு அஞ்சிய ஆண்கள் தங்களிடம் இருந்ததையெல்லாம்

ஜி. யுவராஜ்



கொண்டு வந்து கொள்ளையர் தலைவன் முன் போட்டனர்.

அவர்களுக்குப் பின் பெண்களும் தங்கள் கண்ணீரையும், துக்கத்தையும் அடக்கியவாறே நடுங்கிக் கொண்டு, அணிந்திருந்த நகைகள் எல்லாவற்றையும் கழற்றிப் போட்டனர்.

எல்லாரும் எல்லாவற்றையும் போட்டு விட்ட பிறகும் கூட சந்தேகத்தின் பொருட்டு கொள்ளையர் தலைவன் ஒவ்வொருவரையும் நெருங்கி வந்து சோதித்தான். இனி, இழப்பதற்கு அவர்களிடம் எதுவுமில்லை.

மனநிறைவுடன் குதிரையில் ஏறினான். அனைவரையும் ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான்.

"வேறு யாரிடமாவது தங்கம் போன்ற விலை உயர்ந்த பொருள்கள் உள்ளனவா? உண்மையைக் கூறி விடுங்கள்" என்று ஒரு அதட்டல் போட்டான். எவரிடமும் எதுவும் இல்லாத காரணத்தால் அனைவரும் மௌனம் சாதித்தனர். கொள்ளையர் தலைவன் வெற்றிப் புன்னகையுடன் குதிரை மீது அமர்ந்து அதனைக் கிளப்ப முயன்றான்.

அப்போது தெளிவாக ஒலித்தது ஒரு குரல்!

"ஐயா, தயவுசெய்து நில்லுங்கள். நீங்கள் இப்போது கிளம்ப வேண்டாம். என்னிடம் தங்கக் காசுகள் நிறையவே இருக்கின்றன" என்று பயணிகள் கூட்டத்திலிருந்து சுமார் பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன்



வெளிவந்து நின்றான்.

அவன்தான் பேசினான் என்று தெரிந்ததும் வியப்பு அடைந்தான் கொள்ளையர் தலைவன்.

உடனே தன் கூட்டத்தாரிடம், "பாவம், இவன் ஓர் அறியாச் சிறுவன். நாம் யார் என்பது இவனுக்குத் தெரிந்தால் அப்படிச் சொல்வானா? இதற்கு நாம் மதிப்பு கொடுக்கத் தேவையில்லை. நாம் போகலாம்!" என்று அலட்சியமாகக் கூறிக் குதிரையைக் கிளப்ப எத்தனித்தான்.

அப்போதும் சிறுவன் விடவில்லை.

"நீங்கள் யார் என்பது எனக்குத் தெரியும். தெரிந்தேதான் கூறினேன். உண்மையிலேயே நான் சொல்லுகிறேன். என்னிடம் தங்கக் காசுகள் நிறையவே உள்ளன" என்றான்.

அவனுடன் வந்திருந்த கூட்டமும் வியப்படைந்தது. "ஓஹோ! அப்படி என்றால் உன்னிடம் இருக்கும் அந்தக் காசுகளை வெளியே எடுத்துக் காட்டு" என்று சொன்னான் கொள்ளையர் தலைவன்.

அதற்கு அச்சிறுவன், "அதை நினைத்த நேரத்தில் எல்லாம் எடுக்க இயலாது. சிறிது சிரமப்பட்டால் அதனை பெற்று விடலாம்" என்றான்.

"நீ என்ன சொல்கிறாய்?" என்று வியப்புத் தாளாமல் கேட்டான் தலைவன்.

உடனே அந்தச் சிறுவன் தன்னுடைய சட்டையின் உட்பக்கத்தைக் காட்டினான்.

"இதற்குள்தான் நிறையத் தங்கக் காசுகள் வைத்துத் தைக்கப்பட்டுள்ளன. சட்டை முழுவதும் பொற்காசுகள் உள்

ளன. அவற்றைப் பெற வேண்டுமானால் ஒவ்வொன்றாகக் கிழிக்க வேண்டும்'' என்றான்.

கொள்ளையனின் கண்கள் ஆசையில் மின்னின.

சிறுவனுடைய சட்டையைக் கழற்றினான். கிழித்துப் பார்த்தான். உள்ளே நிறைய தங்கக் காசுகள் இருந்தன. எடுத்துக் கொண்டான்.

கொள்ளையர் தலைவன் யோசித்தான்:

'நான் கிளம்பிச் சென்றிருந்தால் இவன் தங்கக் காசுகள் காப்பாற்றப்பட்டு இருக்கும். அப்படியிருந்தும் இவன் ஏன் இதனை வெளிப்படுத்தினான்? ஏன் தன்னைத்தானே காட்டிக் கொடுக்க வேண்டும்?'

நினைக்க நினைக்க அவனுள் குழப்பம் மிகுந்தது.

சிறுவனிடம் கேட்டான், "தம்பி! உன்னிடம் ஏது இவ்வளவு தங்கக் காசுகள்?''

"ஐயா, இந்தக் காசுகள் என் தாயால் எனக்குத் தரப்பட்டவை. படிக்கப் பக்கத்து ஊரில் உள்ள பள்ளியில் சேரப் போய்க் கொண்டிருக்கிறேன். என் படிப்புச் செலவுக்காக என் தாய் இந்தக் காசுகளைக் கொடுத்தார். மேலும் நான் சிறுவன். என்னை எந்தக் கொள்ளையரும் சோதனையிட மாட்டார்கள் என்பது என் அம்மாவின் எண்ணம். எனவேதான் பாதுகாப்பாகக் காசுகளைச் சட்டையிலே தைத்து அனுப்பி வைத்தார்'' என்று கூறினான்.

"அது சரி, நான் கிளம்பிச் செல்லும் வேளையில் காசுகளைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பாமல் உன்னை நீயே காட்டிக் கொடுத்துக் கொண்டது ஏன்?''

இதைக் கேட்ட சிறுவன் புன்னகை பூத்தான்.

"நீங்கள் உண்மையைக் கூறி விடுங்கள் என்று எச்சரிக்கை விடுத்தீர்கள். அது வரை அமைதியாக இருந்த எனக்கு உங்களுடைய சொல் சாட்டையடியைப் போல் இருந்தது. நான் உண்மையானவனாக இல்லையே என்று என் மனம் வருந்தியது. எனவேதான் கிளம்பிச் செல்ல இருந்த உங்களைத் தடுத்து அழைத்தேன்'' என்று கூறினான்.

கொள்ளையனின் உள்ளம் நெகிழ்ந்தது.

"எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் உண்மையே பேச வேண்டும் என்று உனக்குச் சொல்லிக் கொடுத்தவர் யார்?'' என்று கேட்டான்.

"என்னுடைய அம்மா'' என்று உடனே பதில் கூறினான் சிறுவன். "இன்னும் வேறு ஏதேனும் சொல்லிக் கொடுத்தார்களா?'' என்று வியப்போடு கேட்டான் கொள்ளையர் தலைவன்.

"வேறு ஒன்றையும் சொல்லிக் கொடுத்துள்ளார். எந்தச் சூழ்நிலையிலும் எதற்காகவும் பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளக் கூடாது என்றும் கூறியுள்ளார்'' என்றான் சிறுவன்.

இடி தலையில் விழுந்தது போல் அதிர்ச்சிக்குள்ளானான் கொள்ளையர் தலைவன். இதுவரை செய்து வந்த தவறுகளை எண்ணி வருந்தினான்.

"தம்பி! நீ என்னை மன்னிக்க வேண்டும். கொள்ளையடித்து வாழ்க்கை நடத்தி வந்த என்னை மனிதனாக்கியது நீதான்! இனி நான் திருட மாட்டேன். பிறர் பொருள் மீது ஆசை கொள்ள மாட்டேன்'' என்று கண்ணீருடன் கூறினான்.


கொள்ளையடித்த பொருள்கள் அனைத்தையும் திருப்பிக் கொடுத்தான். தன் கூட்டத்தாருடன் விரைந்து காட்டுக்குள் சென்று மறைந்தான்.

''நான் தர்பூசணி பழம் வாங்கிட்டு வரும்போது கை நழுவி ரோட்டில் விழுந்துருச்சு.''

''அச்சச்சோ! அப்புறம் என்ன ஆச்சு?''

''தார் பூசின பழம் ஆயிருச்சு!''

– தாரை மா. மகேஷ்





கோகுலத்துக்கு சந்தா செலுத்திவிட்டீர்களா?

வினித் கோகுலத்தின் வாசகன். ஏற்கனவே சந்தா செலுத்தி விட்டான். பிறகு எதற்கு இப்படி பறக்கிறான்? அவன் நண்பன் சதீஷ் பிறந்த நாளுக்கு கோகுலம் சந்தாவை அன்பளிப்பாகத் தருவதற்காகத்தான்! இவர்களைப் போல் உங்களுக்கும் கோகுலத்தைப் படிக்க ஆர்வம் இருக்கும். நீங்களும் சந்தா செலுத்தலாமே! அல்லது நீங்கள் ஏற்கெனவே சந்தாதாரராக இருந்தால் உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா செலுத்தலாமே!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

யாசகம் வேண்டாம்!

பழனி சாரிடம் என்ன பதில் சொல்வதென்று யோசித்தான் தூயவன். அவனுக்கு அழ வேண்டும் போல் தோன்றியது.


இதோ இன்றோடு ஆறாவது நாள் ஆகி விட்டது அவன் பள்ளிக்குப் போய். கொஞ்ச நேரத்துக்கு முன்தான் பக்கத்துத் தெரு யாழிசை வந்து சொல்லி விட்டுப் போனாள். காரணம் கேட்பதற்காக மாலை வீட்டுக்கு வரச் சொல்லி இருக்கிறார் பழனி சார்.

எல்லா மாணவர்களின் முன்னிலையிலும் காரணம் கேட்பது அநாகரிகம் என்று தெரிந்துதான் வீட்டுக்கு வரச் சொல்லி இருக்கிறார் பழனி சார். அவர் வீட்டுக்குப் போய் மட்டும் என்ன... குடும்ப கஷ்டத்தை எப்படி அவரிடம் வெளிப்படையாகச் சொல்வது. படிக்க விருப்பமில்லை என்று பொய் சொல்லி விட வேண்டியதுதான்.

அதோடு பிரச்னை முடிந்து விடுமா என்ன? படிக்க விருப்பமில்லாதவனால் இதுநாள் வரை எப்படி முதல் ஐந்து ரேங்க்குகளுக்குள் வர முடிந்தது என்று அவர் கேள்வி கேட்காமல் விட்டு விடுவாரா?

வேறு எப்படி பதில் சொன்னால் பழனி சார் தன்னை தன் போக்கிலேயே விட்டு விடுவார் என்று யோசித்தான் தூயவன்.

குடும்பக் கஷ்டம் - அதனால் மாணவன் பள்ளிக்குப் போகாமல் நின்று விடுவதும், உடனே ஆசிரியர் அழைத்து மாணவர்களிடம் வசூல் செய்து துணிமணி வாங்கிக் கொடுத்து உதவி, மீண்டும் பள்ளிக்கு வரவழைப்பதுமான எத்தனையோ கதைகளை அவன் பத்திரிகைகளில் படித்து இருக்கிறானே!



இன்று மாலை பழனி சார் வீட்டுக்குப் போக வேண்டும். குடும்ப கஷ்டத்தை அவரிடம் சொல்லவும் தயக்கம், அதே சமயம் பொய் சொல்லி உண்மையை மறைக்கவும் மனமில்லை. குடும்பப் பாரத்தைக் கொஞ்சம் கை கொடுத்து தாங்கிக் கொள்வதற்காகவே அவன் பள்ளிக்குப் போவதை தியாகம் செய்திருக்கிறான்.

அப்பாவுக்குக் காச நோய் அதிகமாகி விட்டதையும், அவரால் தொடர்ந்து நெசவு செய்ய முடியவில்லை என்பதையும் அவன் சொல்வதா வேண்டாமா

என்று யோசித்தான். அம்மா மட்டும் வாங்கும் கூலி எந்த மூலைக்கு?

முன்பணம் ஐந்நூறு பெற்றுக் கொண்டு அப்பா அவனை, நெசவு செய்வதற்காக ஏகாம்பரத்திடம் அடகு வைத்திருப்பதை பழனி சாரிடம் எப்படி சொல்வது என்று யோசித்தான்.

பழனி சார் வீட்டுக்குப் போகாமல் இருந்து விடலாம் என்றால், அவரின் அழைப்புக்கு அவமரியாதை செய்வதாக அர்த்தம். யோசனையில் அவனுக்குத் தலை வலித்தது.

கடைசியாக உண்மையைச் சொல்லி விடுவதென்று முடிவுக்கு வந்தான் தூயவன்.

முன்புறத் தோட்டத்தில் ஈசி சேர் போட்டு உட்கார்ந்து கொண்டிருந்தார் பழனி சார்.

"வா தூயவா... கூப்பிட்டு அனுப்பின உடனேயே வந்துட்டியே. ஆச்சரியம் தான்!" – என்றார் சார்.

"அதில என்ன சார் ஆச்சரியம்?" – என்று அடக்கத்தோடு சொன்னான் தூயவன்.

"அதுல ஆச்சரியம் ஒண்ணுமில்லே. நீ ஒரு வாரமா ஸ்கூலுக்கு வராம இருக்கறதுதான் ரொம்ப ஆச்சரியம்."

தூயவன் பதில் ஏதும் சொல்லாமல் கைகளைக் கட்டி, தலை குனிந்து மவுனமாக நின்றான்.

"அட என்னப்பா... அதுக்குள்ள சோக மாயிட்டே. நான் என்ன கேட்டுட்டேன். நீ என்ன சொல்லணும்னு நெனைக்கிறியோ அதை தாராளமா எங்கிட்ட சொல்லலாம்."

தூயவன் தன் குடும்பப் பின்னணி பற்றியும், அதன் பொருளாதார நிலை பற்றியும், குடும்பப் பொறுப்பு தன்மீது விழுந்து தனது கல்வியையே விழுங்கிக் கொண்டிருக்கும் நிலை குறித்தும் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

"பொருளாதாரத் துறையிலே நோபல் பரிசு வாங்கின அமர்த்தியா சென் போன்ற மேதைகள் பிறந்த நம் நாட்டிலே, பொருளாதார நிலை இப்படி இருக்கிறது ரொம்ப வருந்தக்கூடிய செயல்தான் தூயவா" என்று சொல்லி சற்று நேரம் மவுனமாக இருந்தார் ஆசிரியர். பிறகு அவரே தொடர்ந்து பேசினார்:

"சரி. நாட்டின் அவலங்களை மட்டுமே பேசிக்கிட்டு இருக்கிறதுல பயன் இல்லை. இருட்டை ஒழிக்கணுமேன்னுட்டு இருட்டப் பத்தியே பேசிக்கிட்டு இருந்தா வெளிச்சம் வந்திடாது. மாறாக ஒரு மெழுகுவத்திய கொளுத்தறதுதான் புத்திசாலித்தனம்."



கேலக்ஷி மா. சுரேஷ்

"நீங்க என்ன சொல்ல வர்றீங்க சார்?"

"கவலைப்படாதே தூயவா. உம்மேல இருக்கிற கடன் தொகையை நான் ஏத்துக் கறேன். உன் படிப்புச் செலவையும் நான் பாத்துக்கறேன். நீ நாளையிலிருந்து தவறாம ஸ்கூலுக்கு வா."

ஒரு நிமிடம் யோசித்த தூயவன் "மன்னிக்கணும் சார். நான் அதை ஏத்துக்கலே."

"ஏன் தூயவா?" ஆசிரியர் அதிர்ச்சி யோடு கேட்டார்.

"இப்படி யாசகம் வாங்கி படிக்கக் கூடாதுன்னு நான் முடிவுக்கு வந்துட் டேன் சார்."

"நீ ஏன் இதை யாசகம்னு நெனைக் கறே. உதவின்னு நெனைச்சுக்கோ."

"நான் உழைக்கணும்னு ஆசைப் படறேன் சார்."

"நீ உழைக்கணும்னு நெனைக்கறது தப்பில்ல தூயவா. ஆனா அதைவிட இந்த வயசுல படிக்கணுமே அதானே முக்கியம்" என்றார் ஆசிரியர்.

"நான் உழைச்சிக்கிட்டே படிக்கிறேன் சார்."


"அதுக்காக என்ன செய்யலாம்னு நெனைக்கிறே?"

"சார் உங்க நெருங்கின நண்பர் ராதாகிருஷ்ணன் சார் பஸ் ஸ்டாண்டு பக் கத்தில் 'டெலிபோன் பூத்' வச்சிருக்காரு. அங்கே எனக்கு சாயங்கால நேரத்துல பகுதி நேரமாகவும் ஞாயிற்றுக்கிழமை களில் முழு நேரமாகவும் வேலை வாங்கித் தந்தீங்கன்னா..." - என்று இழுத்தான் தூய வன்.

"நிச்சயம் செய்றேன் தூயவா. நீ உழைச்சிக்கிட்டே படிப்பைத் தொட ரணும்னு நெனைக்கிற பாரு. உன்னைப் பாராட்டறேன். இன்னிக்கே உனக்கு சிபாரிசு பண்ணறேன். நீ நல்லா இருக்கணும். இருப்பே" என்றார் ஆசிரி யர்.

"ரொம்ப நன்றி சார். இனிமே நீங்க என்னை வழக்கம்போல வகுப்புல பார்க்கலாம் சார்" - என்று கண் கலங்கியபடி நன்றிப் பெருக்கோடு சொன் னான் தூயவன்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 பா	லை	2 வ	ன	ம்	■	லை	ல்	3 மு
ய	■	ரி	■	க	■	4 கு	■	த்
ச	■	■	■	5 தா	ழ்	■	■	தி
ம்	த	ர	6 வி	■	■	7 து	வ	ரை
■	■	■	■	■	■	■	■	■
கை	ங்	8 க	■	■	9 கா	ந்	த	ம்
த	■	■	10 கா	11 து	■	■	■	ய
த்	■	12 தோ	■	ற	■	லை	■	த
13 கு	யி	ல்	■	வு	ர	14 த	த்	15 உ

சௌரவ் கங்குலி (இந்தியா)

இந்த இடதுகை பேட்ஸ்மேன் ஒரு நாள் கிரிக்கெட்டில் ஒரே இன்னிங்ஸில் அதிக ரன் எடுத்த இந்தியர் (183 ரன்கள்) என்ற பெயர் பெற்றிருக்கிறார். இது இலங்கைக்கு எதிரான உலகக் கோப்பை போட்டியில் நிகழ்த்தப்பட்டது. இதற்கு முன் அதிகபட்ச இந்திய ரன்கள் 1983 உலகக் கோப்பையில் ஜிம்பாப்வே அணிக்கு எதிராக கபில்தேவ் எடுத்த 175 ரன்களாக இருந்தது.

இங்கிலாந்திற்கு எதிரான போட்டியில் இருபத்தேழு ரன்கள் தந்து 3 விக்கெட்டுகள் வீழ்த்திய கங்குலி வெற்றிக்கு வழி வகுத்தார்.

லீக் போட்டிகளில் சௌரவ்

தென் ஆப்பிரிக்கா : 97 ரன்கள்
ஜிம்பாப்வே : 9 ரன்கள், ஒரு விக்கெட்
கென்யா : 47 ரன்கள்.
இலங்கை : 183 ரன்கள்
இங்கிலாந்து : 40 ரன்கள், மூன்று விக்கெட்டுகள்.

ராகுல் திராவிட் (இந்தியா)


ஓராண்டிற்கு முன் வரை ஒரு நாள் கிரிக்கெட்டிற்கு ஏற்றவராக ராகுல் திராவிட் கருதப்படவில்லை. இந்த உலகக் கோப்பை லீக் போட்டிகளில் 369 ரன்கள் குவித்து, பேட்டிங் வரிசையில் முதலிடத்தில் இருக்கிறார். கென்யா, இலங்கை அணிகளுக்கு எதிராக அடுத்தடுத்து செஞ்சுரி அடித்து சாதனை படைத்தார். இலங்கைக்கு எதிரான போட்டியில் உலக சாதனை பார்ட்னர்ஷிப் ரன்களாகிய 318ஐ சௌரவ் கங்குலியுடன் இணைந்து சேர்த்தவர் இவரே.

லீக் போட்டிகளில் ராகுல்

தென் ஆப்பிரிக்கா : 54 ரன்கள்
ஜிம்பாப்வே : 13 ரன்கள்
கென்யா : 104 ரன்கள் (ஆட்டமிழப்பில்லை)
இலங்கை : 145 ரன்கள்
இங்கிலாந்து : 53 ரன்கள்

சச்சின் டெண்டுல்கர் (இந்தியா)

'லிட்டில் மாஸ்டர்' சச்சினுக்கு இது மறக்க முடியாத உலகக் கோப்பை. ஜிம்பாப்வே போட்டிக்கு முன் தினம் தன் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு இந்தியா திரும்ப வேண்டியதாயிற்று; இந்தியாவோ அந்தப் போட்டியில் தோல்வியுற்று தத்தளிக்கும் நிலை. கென்யாவுடனான அடுத்தப் போட்டிக்குத் திரும்ப வந்தார்; அடித்தார் செஞ்சுரி; எல்லோருக்கும் உற்சாகமூட்டினார். இந்திய அணி தொடர்ந்து மூன்று போட்டிகளில் வெற்றி பெற்று 'சூப்பர் சிக்ஸ்' பிரிவிற்குள் நுழைந்தது.



• சச்சின்



• அக்ரம்

உலகக் கோப்பை நாயகர்கள்

லீக் போட்டிகளில் சச்சின்

தென் ஆப்பிரிக்கா : 28 ரன்கள்
கென்யா : 140 ரன்கள்
இலங்கை : 2 ரன்கள்
இங்கிலாந்து : 22 ரன்கள்

கோர்ட்னி வால்ஷ் (மேற்கிந்திய தீவுகள்)

அணியின் முன்னாள் கேப்டன் வால்ஷிற்கு வயதாகி விட்டாலும் வேகம் குறையவில்லை. கபில் தேவின் 434 விக்கெட்டுகள் டெஸ்ட் சாதனையை முறியடிக்கக் காத்திருக்கிறார் வால்ஷ். அவருக்கு இன்னும் 12 டெஸ்ட் விக்கெட்டுகளே தேவை. இந்த உலகக் கோப்பையில் 5 ஆட்டங்களில் 11 விக்கெட்டுகள் வீழ்த்தினார். ஆனாலும் அவை அணியை சூப்பர் சிக்ஸிற்கு அழைத்துச் செல்ல போதுமானதாக இல்லை.

லீக் போட்டிகளில் வால்ஷ்

பாகிஸ்தான் : 28 ரன்களுக்கு, மூன்று விக்கெட்டுகள்
ஸ்காட்லாந்து : 3 விக்கெட்டுகள்
நியூசிலாந்து : 1 விக்கெட்
பங்களாதேஷ் : நான்கு விக்கெட்டுகள்

ஸோயெப் அக்தர் (பாகிஸ்தான்)

இன்று உலகிலேயே அதிக வேகத்தில் (மணிக்கு 93 மைல்கள்) பந்து வீசும் அக்தர் லீக் போட்டிகளில் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார். ஷார்ஜா போட்டிகளின் போது இவர் மணிக்கு 97 மைல்கள் என்ற வேகத்தில் பந்து வீசினார். இப்போது வேகம் குறைந்திருக்கிறது – ஆற்றல் கூடியிருக்கிறதா என்பது உலகக் கோப்பை போட்டிகளின் இறுதியில் தெரியவரும். எதிரணி ஆட்டக்காரர்கள் இவரது வேகம் கண்டு மிரள்வது என்னவோ உண்மை!

லீக் போட்டிகளில் அக்தர்

நியூசிலாந்து : 2 விக்கெட்டுகள்
ஆஸ்திரேலியா : 1 விக்கெட்
ஸ்காட்லாந்து : 3 விக்கெட்டுகள்
மேற்கிந்தியத் தீவுகள் : 2 விக்கெட்டுகள்

சக்லைன் முஷ்டாக் (பாகிஸ்தான்)

உலகின் முக்கிய ஆஃப் ஸ்பின்னரான சக்லைன் ஒரு நாள் போட்டிகளின் மாஸ்டர். ஆஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டியில் மூன்று முக்கிய விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டார்.

லீக் போட்டிகளில் சக்லைன்

மேற்கிந்தியத் தீவுகள் : 1 விக்கெட்
ஸ்காட்லாந்து : 1 விக்கெட்
ஆஸ்திரேலியா : 3 விக்கெட்டுகள்
நியூசிலாந்து : 2 விக்கெட்டுகள்
பங்களாதேஷ் : 5 விக்கெட்டுகள்

லான்ஸ் குளூஸ்னர் (தென் ஆப்பிரிக்கா)

லீக் போட்டிகளில் தென் ஆப்பிரிக்காவின் ஹீரோ இவர்தான். 13 விக்கெட்டுகள், ஆட்டமிழப்பில்லாமலே நான்கு போட்டிகளில் 164 ரன்கள்! தென் ஆப்பிரிக்கா உலகக் கோப்பையை வெல்லுமானால், அதில் குளூஸ்னருக்கு மிகமுக்கிய பங்கு உண்டு என்பதில் ஐயமில்லை.

லீக் போட்டிகளில் குளூஸ்னர்

இந்தியா : 12 ரன்கள், 3 விக்கெட்டுகள்
இலங்கை : 52 ரன்கள், 3 விக்கெட்டுகள்
இங்கிலாந்து : 48 ரன்கள், 1 விக்கெட்
கென்யா : 5 விக்கெட்டுகள்
ஜிம்பாப்வே : 52 ரன்கள், 1 விக்கெட்.

வாசிம் அக்ரம் (பாகிஸ்தான்)

1992இல் இம்ரான்கான் பெற்ற உலகக் கோப்பையை இந்த ஆண்டு மீண்டும் பெற முயற்சி செய்கிறார் அக்ரம். ஒரு நாள் போட்டியிலும், டெஸ்ட் போட்டியிலும் 350 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய ஒரே பந்து வீச்சாளர் இவர்தான். பின் வரிசை பேட்ஸ்மென்களில் அதிரடி ஆட்டம் ஆடக் கூடியவர் அக்ரம்.

லீக் போட்டிகளில் அக்ரம்


நியூசிலாந்து : 1 விக்கெட்
ஆஸ்திரேலியா : 4 விக்கெட்டுகள்
மேற்கிந்தியத் தீவுகள் : 43 ரன்கள்
ஸ்காட்லாந்து : 37 ரன்கள்,
3 விக்கெட்டுகள்
பங்களாதேஷ் : 1 விக்கெட்

ரிட்லே ஜேக்கப்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்)

இவர் விக்கெட் கீப்பர் மற்றும் தொடக்க ஆட்டக்காரராகப் பங்காற்று கிறார். நியூசிலாந்திற்கு எதிரான போட்டியில், 5 கேட்சுகளைப் பிடித்தார்; ஆட்டமிழக்காமல் 80 ரன்களைக் குவித்தார். இவையே அன்று அணியின் வெற்றிக்குக் காரணமாயிற்று. ஆஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் மொத்த ஸ்கோரே 110 தான். அதில் ஜேக்கப்ஸ் சேர்த்தது ஆட்டமிழக்காமல் 49 ரன்கள்! 30 வயதான ஜேக்கப் கடந்த ஆண்டுதான் கிரிக்கெட் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டார்.

லீக் போட்டிகளில் ஜேக்கப்ஸ்

பாகிஸ்தான் : 25 ரன்கள், 1 விக்கெட்
பங்களாதேஷ் : 51 ரன்கள், 2 கேட்சுகள்
நியூசிலாந்து : 80 ரன்கள், 5 கேட்சுகள்
ஸ்காட்லாந்து : 3 கேட்சுகள்
ஆஸ்திரேலியா : 49 ரன்கள், 1 விக்கெட்



திராவிட்

• கங்குலி

செஞ்சுரி அடிக்கப் பிறந்தவர்கள்!

உலகக் கோப்பை போட்டி களில் (இக்கட்டுரை எழுதப்படும் ஜூன் 8 வரை) இந்தியர் தவிர எவரும் செஞ்சுரி அடிக்கவில்லை. ராகுல் திராவிட் (2 செஞ்சுரிகள்), சௌரவ் கங்குலி (1 செஞ்சுரி), சச்சின் டெண்டுல்கர் (1 செஞ்சுரி), அஜய் ஜடேஜா (1 செஞ்சுரி) பாராட்டுகள்!

ஐந்து விக்கெட் வீழ்த்தியவர்கள்!

இந்த உலகக் கோப்பை லீக் போட்டிகளில் சக்லைன் முஷ்டாக் (பாகிஸ்தான்), ராபின் சிங் (இந்தியா), மெக்ராத் (ஆஸ்திரேலியா), குளூஸ்னர் (தென் ஆப்பிரிக்கா), வெங்கடேஷ் பிரசாத் (இந்தியா) ஆகிய ஐவரே ஒரே இன்னிங்சில் ஐந்து விக்கெட்டுகள் வீழ்த்திய பந்து வீச்சாளர்கள்.

— விளையாட்டுப் பையன்



குஜராத் மாநிலத்தில் போகாபூர் என்ற சிற்றரசை குமரன்சிங் ஆண்டு வந்தார். அவரது உயிர் நண்பர் பண்ஹாஜி ராஜபுத்ரர். அரசர் தெய்வபக்தி உள்ளவர். மக்களை உயிராக நினைத்தார். நீதிநெறி தவறாமல் அரசாண்டார். அன்ன சத்திரங்கள் கட்டினார். கோயில் திருப்பணிகளை அக்கறையோடு செய்தார். குளங்கள், ஏரிகள் வெட்டினார். இவரது ஆட்சியில் போகாபூர் செழிப்பாக இருந்தது. மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர்.

தீபாவளித் திருநாள், எங்கும் விதவிதமான தீபாலங்காரம். அரசரும், பண்ஹாஜியும் பஜனை கோஷ்டிக்குப் பின்னால் ஆலயம் சென்றனர்.

பண்ஹாஜி அற்புதமான குரல் வளம் படைத்தவர். பஜன் பாட ஆரம்பித்தார். வர வர குரல் ஓங்கியது. அவர் பாடியதை மக்கள் எதிரொலித்தனர். ஜால்ரா, டோலக் எல்லாம் உச்சஸ்தாயியில் ஒலி

ஆர். பொன்னம்மாள்

எழுப்பின.

திடீரென்று பண்ஹாஜி துள்ளி எழுந்தார். விக்கிரகத்தின் ஆடையைக் கசக்கி விட்டார்.

அரசரும், மற்றவர்களும் 'என்ன, என்ன' என்று பதறினர்.

"துவாரகையில் கண்ணனது ஆடையில் தீப் பற்றி விட்டது. தீபாராதனை நெருப்பில் பச்சை வண்ணனது பனாரஸ் துப்பட்டா தீப் பற்றியது. நல்லவேளை முழுவதும் எரியவில்லை" என்று பெருமூச்சு விட்டார் பண்ஹாஜி.

'ஆஹா! எப்பேற்பட்ட தீர்க்கதரிசி. இங்கிருந்தபடி துவாரகையில் தீப்பற்றியதைக் கண்டிருக்கிறாரே' என்று பக்தர்கள் பரவச

முற்றனர்.

அரசருக்கோ மக்களிடம் தன் பக்தியைப் பறைசாற்ற பண்ஹாஜி நடத்தும் நாடகம் என்றுபட்டது. இவரது பாசாங்கைக் கிழிக்க வேண்டும் என்று ஆத்திரம் மூண்டது.

''துவாரகாதீசனுக்கு என்ன நிற ஆடை அணிவிக்கப்பட்டிருந்தது?'' என்று கேட்டார் மன்னர்.

''மரகதப் பச்சை'' என்று தயங்காது பதிலளித்தார் பண்ஹாஜி. தொடர்ந்து பஜனையும், பூஜையும் நடந்து முடிந்து இருவரும் அவரவர் இருப்பிடம் சென்றனர்.



துவாரகைக்கு மிக அருகில் உள்ள சிற்றூர் இராவடாபுரம். அங்கே அரசராயிருந்தவர் குமரன் சிங்கின் நெருங்கிய உறவினர். அவருக்கு, ''தீபாவளி அன்று இரவு துவாரகை

பண்ஹாஜியின் பக்தி!



கோவிலில் விசேஷம் ஏதும் நடந்ததா என்று விசாரித்து, உடன் தகவல் அனுப்பவும். அன்று பரந்தாமனுக்கு எந்த நிற ஆடை அணிவிக்கப்பட்டிருந்தது என்றும் விசாரிக்கவும்'' என்று ஓலை எழுதினார்.

விரைவிலேயே பதில் வந்தது. ஆவலோடு பிரித்துப் படித்த அரசர் திகைத்தார்.

''பெரிய தீபாராதனை ஆகும் போது நள்ளிரவாகி விட்டது. அர்ச்சகரின் தூக்கக் கலக்கத்தில் கர்ப்பூரக் கட்டி கண்ணனின் பச்சை வண்ண பனாரஸ் துப்பட்டாவில் பட்டு தீப் பிடித்து எரிந்தது. இதில் ஒரு ஆச்சரியம் என்னவென்றால் யாரும் அணைக்கு முன்பே தீ அணைந்து விட்டது'' என்றிருந்தது.

'**ஆ**ஹா! தமிழ்நாட்டில் அபிராமி பட்டர் அமாவாசையன்று பௌர்ணமி என்று சொன்னதற்காக தன் தாடங்கத்தை (தோடு) வானில் எறிந்து நிலவை தோன்றச் செய்தாள் அம்பிகை என்று கேள்விப்படிருக்கிறோம். பக்தை மீரா குடித்த விஷம் கண்ணனை நீலநிறமாக்கி இருக்கிறது! பண்ஹாஜியைப் போன்ற சிறந்த பக்தர் எனது நண்பராக இருப்பதே நான் செய்த பாக்கியம் என்றெண்ணாமல் அவரை சந்தேகித்தேனே' என்று மனமுருகி கண்ணீர் சொரிந்தார் மன்னர்.

பண்ஹாஜியிடமும் இதைக் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவரது இறைப் பணிக்கும், பாகவத சேவைக்குமாக ஐந்து கிராமங்களை எழுதி வைத்தார்.

'எல்லாம் அவன் செயல்' என்று அதையும் இயல்பாக எடுத்துக் கொண்டார் பண்ஹாஜி.

கோடை விடுமுறைப் போட்டி I முடிவு

ஒளிந்திருக்கும் வார்த்தைகளைக் கண்டுபிடியுங்கள்!

விடுமுறை நேரம். போட்டியும் எளிதாக இருந்ததால் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இவர்களில் பெரும்பாலானோர் சரியான விடைகளையே தந்திருப்பதால் பரிசு குலுக்கல் முறையில் முடிவு செய்யப்பட்டது.



சரியான விடை :

1. தர்பூசணி
2. மோர்
3. வெள்ளரி
4. இளநீர்

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. க. சுகன்யா, தேனி.
2. ஆர். கிரீஷ், அம்மாபேட்டை, சேலம்.
3. எஸ். மீனா, ஜலந்தர், பஞ்சாப் மாநிலம்.
4. நா. சேதுராமன், எட்டாம் வகுப்பு, கோவை.
5. க. அபிநயா, இராமநாதபுரம்.
6. ஆ. சேவியர், இருதயபுரம், புதுக்கோட்டை மாவட்டம்.
7. அ. கிருத்திகா, ஐந்தாம் வகுப்பு, எஸ்.டி.ஏ. பள்ளி, கோவில்பட்டி.
8. ச. வேங்கடலெட்சுமி, திருச்சி.
9. க. மணிகண்டன், மகாலிங்கபுரம் அஞ்சல், பொள்ளாச்சி.
10. உ. வித்யா ராணி, மணக்காடு அஞ்சல், காயாமொழி வழி.
11. எம். பத்மாவதி, ராயக்கோட்டை, ஓசூர்.
12. வி. ரெங்காலினி, எட்டாம் வகுப்பு, நாகர்கோவில்.
13. டி. முத்துக்குமார், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.
14. எல்.எம். அபிதா, திருவண்ணாமலை.
15. சி. கண்ணன், செல்லூர், மதுரை.
16. பி. சிவசங்கரி, கும்பகோணம்.
17. ஜெ. லாவண்யா, தூத்துக்குடி.
18. அ. மேரி அருள்பிரியா, பத்தாம் வகுப்பு, மூங்கில் துறைப்பட்டு.
19. ஜெ. ஜோஸ் கெபின் பெனிட்டோ, எட்டாம் வகுப்பு, வில்லிவாக்கம், சென்னை.
20. மு. மாஜிதா முஜம்மில், பன்னிரெண்டாம் வகுப்பு, லால்பேட்டை, கடலூர் மாவட்டம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

கிரிக்கெட்டில் பெண்கள் பிரகாசிப்பார்களா?

* சுபா, உமா,
பைரவி,
அஷிதா

இன்று சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் மந்திரம் போல் உச்சரிக்கும் வார்த்தை 'கிரிக்கெட்'. கிரிக்கெட் விளையாடும் நாடுகள் மட்டுமில்லாமல் உலகின் பல்வேறு நாடுகளிலும் கூட கிரிக்கெட்டிற்கு ஆதரவு பெருகி வருகிறது.

மிகக் கடுமையான கோடை வெயிலையும் பொருட்படுத்தாது விடுமுறையில் மட்டையுடன் அலையும் சிறுவர்களை எங்கும் பார்க்க முடிகிறது.

அத்தனை நாட்டு கிரிக்கெட் வீரர்களின் பெயர்களும் டேட்டாக்களும் விரல் நுனியில் வைத்திருக்கிறார்கள் நம் சிறுவர்கள்.

ஒரு விளையாட்டின் மீது மக்களுக்கு மிகுந்த ஆர்வம் இருக்கும் வேளையில் இன்னொரு புறத்தையும் கவனிக்க வேண்டியுள்ளது.

லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வேலைகளை ஒத்தி வைத்து விட்டு கிரிக்கெட்டே கதி என்று டீவி முன் பல மணி நேரம் செலவிடுவதை கண்கூடாகக் காண முடிகிறது.

மற்ற விளையாட்டுகளைப் போல் கிரிக்கெட் சில மணி நேரங்களில் முடியக்கூடிய விளையாட்டல்ல. ஒரே இடத்தில் அசையாமல் உட்கார்ந்து பார்க்க வேண்டியுள்ளது. இதனால் நேரமும் விரயமாகிறது, நமது உடலும் உடற்பயிற்சி ஏதுமின்றி ஆரோக்கியம் கெடுகிறது.

தொடர்ச்சியாகப் பார்ப்பதால் கண்களுக்கும் பிரச்னை வருகிறது. விளையாடுபவர்களுக்கு உடற்பயிற்சிக்கு உடற்பயிற்சி, பணத்திற்குப்



பணம், புகழ் எல்லாம் கிடைத்து விடு கிறது. ஆனால் நம்மைப் போன்ற ரசிகர் களுக்கு?

கிரிக்கெட்டில் சாதக, பாதகமான விஷயங்கள் பல இருக்கின்றன. இதை ரசனை என்ற அளவோடு பார்த்துக் கொள்வது நல்லது. கண்மூடித்தனமாக அலைவது தான் கெடுதலான விஷயம்.

சரி, கிரிக்கெட்டில் பரவலாக பெண்கள் விளையாடுவதில்லையே, ஏன்? கிரிக்கெட் பெண்களுக்கான விளையாட்டு இல்லையா?

முன்னாள் கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த், "கிரிக்கெட் பெண்களுக்கான விளையாட்டே அல்ல" என்று சொல்கிறார். இவர் சொல்வது உண்மைதானா? சென்னையில் கிரிக்கெட் விளையாடும் பெண்களிடம் கேட்டோம்.

கல்லூரியில் படிக்கும் சுபா, "நான் சின்ன வயதிலிருந்தே கிரிக்கெட் விளையாடி வருகிறேன். எங்கள் கல்லூரி சார்பில் பல போட்டிகளில் பங்கேற்று வருகிறேன். என்னுடைய திறமையைப் பார்த்துதான் இங்கு பிராக்டிஸ் செய்ய சேர்த்துக் கொண்டார்கள். ஸ்ரீகாந்த் சொன்ன விஷயம் அவருடைய சொந்தக் கருத்து. இது என்னைப் பொறுத்தவரை ஏற்றுக் கொள்ள முடியாதது.

"உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பெண்களால் கிரிக்கெட் விளையாட முடியும். எந்தவிதக் கஷ்டமும் இல்லை" என்று படபடவென பேசினார்.

பெண்கள் கிரிக்கெட் பரவலாக முன்னிலைக்கு வராததற்குக் காரணம் என்னவென்று கேட்ட போது, "அறியாமைதான்! இது ஆண்கள் விளையாடக் கூடிய விளையாட்டு என்று புகழ்பெற்ற கிரிக்கெட் வீரரே சொல்லும் போது மற்றவர்களைப் பற்றி என்ன சொல்வது? சிலர் என்னிடம் பெண்களால் சிக்ஸர் எல்லாம் அடிக்க முடியுமா என்று கேட்கின்றனர். எங்களால் சிக்ஸர்களும் அடிக்க முடியும். சிறந்த சாதனையையும் படைக்க முடியும்" என்று கூறினார் பைரவி.

"பெண்கள் கிரிக்கெட் பெரிய அளவில் பிரபலமாகாததற்குக் காரணம் ஸ்பான்சர்கள்தான். இன்று எல்லாமே வியாபாரமாகி விட்டது. ஆண்கள் விளையாடும் கிரிக்கெட் போட்டிகளை நடத்த ஏகப்பட்ட ஸ்பான்சர்கள் போட்டி போடுகின்றனர். அவர்கள் பெண்கள் கிரிக்கெட்டில் கவனம் செலுத்தி ஸ்பான்சர் செய்தால் இதுவும் பரவலாகத் தெரிய வரும். ஆனால் அது உடனடியாக நடக்கக்கூடிய விஷயமல்ல. பல வருஷங்கள் ஆகலாம்" என்றார் பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் உமா.

அஷிதா, "டென்னிஸில் கூட ஆரம்பத்தில் இது பெண்களுக்கான ஆட்டம் இல்லை என்ற கருத்து பரப்பப்பட்டது. ஆனால் இன்று சர்வதேச அளவில் பெண்கள் பிரகாசிக்கின்றதை நாம் பார்க்கிறோம். அதேபோல் காலப் போக்கில் தவறான எல்லாக் கருத்துகளும் அடிபட்டு விடும். இன்றைக்குப் பெரிய அளவில் பெண்கள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவதில்லை என்பது உண்மைதான். ஆனால் சிறிய அளவில் நிறைய டோர்னமெண்ட்களில் நாங்கள் விளையாடி வருகிறோம். எங்கள் பயிற்சியாளர் தர்மலிங்கம் திறமையும் ஆர்வமும் உள்ளவர்களுக்கு இலவசமாக பயிற்சி கொடுக்கிறார்" என்றார்.

பயிற்சியாளர் தர்மலிங்கம், "முன் எப்போதையும் விட இப்போது கிரிக்கெட்டில் பெண்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே விதமாகத் தான் பயிற்சி அளிக்கிறேன். 25 பெண்கள் என்னிடம் பயிற்சி பெறுகிறார்கள். கடின உழைப்பும் உறுதியும் ஆர்வமும் இருந்தால் கிரிக்கெட்டில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் சாதனைகளைப் படைக்க முடியும்" என்றார்.

அட்டையில் : **பைரவி**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**


Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

பிருந்தாவனம்


இங்கு நான்கு உருவங்கள் இருக்கின்றன. மேலும் ஒரு உருவத்தை உருவாக்குங்கள் பார்க்கலாம்!



பாப்பா ஐஸ்கிரீமை அடைய வழிகாட்டுங்கள்!



எண்களை இணைத்துப் படத்தை உருவாக்குங்கள்!



விடை :



வெயிலுக்கு சூப்பர் குளியல்!



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/99 * Licensed
to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

